மெய்ப்பொருள் துணை.

இளைஞர் பாடல்கள்.

இது

கோவைத் தமிழ்ச் சங்க அமைச்சரும்,

"கொங்குநாடும்—சுந்தரமூர்த்திகளும்"

"மருதமலை மான்மியம்"

முதலிய நூல்களின் ஆசிரியருமாகிய

இராவ சாஹப்

C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B.L.,

அவர்கள் இயற்றியது.

1932

பதிவு செய்யப்பட்டது.

கோயமுத்தூர்
செங்குந்தர் அச்சுக்கூடம் (லிமிடெட்)டில்
பிரசுரிக்கப்பெற்றது.

கடவுள் துணை.

முகவுரை

நம் தமிழ் மொழி பண்டையப் பெருமை வாய்ந்தது என்பது யாவரும் அறிந்ததே யாம். பண்டைக் காலத்து அறிஞர்கள் நமக்காக வைத்து விட்டிருக்கும் அருமையான பொருட் குவியல்களை நாம் எடுத்துப் பயன் படுத்தி மகிழ்ந்து கொண்டாடுகின்றோம். அவைகளின் இனிய சுவைகளை நாம் சுவைத்து இன்புறுகிறோம். இன்னும் பலகாலமும் இன்புறுவோம். ஆனால் தற்காலத் தமிழ் மொழியைப் பற்றித்தான் நாம் சிந்திப்பதை விட்டு விட்டோம். முற் காலத் தமிழைப்போல் தற்காலத்திலும் தமிழ் மொழி இனிய சுவையுடன் வளர்ந்து வர வேண்டாமா என்பதை நினைப்பார் இல்லை. தற்காலத்துத் தமிழ் மொழி இனிய சுவையுடன் விளங்க வேண்டும் என்றால் அதற்குப் புத் துணர்ச்சியும் புது உடையும் வேண்டும். ஏனைய மொழியாளர் கள் இப்பண்பை உணர்ந்து தம் தம் மொழிகளுக்கு இவ் வுணவும் உடையும் தந்து வளர்க்கிறார்கள். நாம் ஏன் அப் படிச் செய்தல் கூடாது.

சமீப காலத்தில் புத்துணர்ச்சியும் புது நடையும் கொண்ட சில உரை நடை நூல்களைத் தமிழில் இயற்ற முயன்று வருகின்றனர் நம் தமிழ் மக்கள். ஆனால் செய்யுளி யலிலோ ஒன்றிரண்டு அறிஞர்களைத் தவிர வேறு எவரும்

மூன் வரவில்லை. நம் நாட்டு மாசிகைகளிலும் இம்முறை தழுவுவாரில்லை. கலைகளின் மேம்பாட்டையும் மக்கள் எண்ண மாறுதல்களையும் ஆராய்ந்து அவைகளுக்குத் தக்க வாறு புத்துணர்ச்சிகளைப் புகுத்திப் புது முறைகளில் செய்யுள் இயற்றுதல் தற்காலத்திற்கு இன்றியமையாதது ஆகும். இளைஞர்களின் மனதில் தமிழ் மொழியைக் குறித்து ஆர்வம் ஏற்படுத்தும் பொருட்டு இவ்விதப்புது முறைகள் தழுவ வேண்டியது அவசியமாகும். நம் இளைஞர்கள் ஏன் தமிழில் ஆர்வம் இல்லாதிருக்கின்றனர் என்று நாம் அறிந்து கொண்டோமில்லை. இதனை அறிந்து அதன் குறைவுகளை நீக்குவது நம் பெரியோர்களின் கடமை ஆகும்.

சில நாள்களாக என்மனப் போக்கிற்கு உகந்தபடி என் எண்ணங்களைச் செய்யுள்களில் எழுதியும், பிற மொழிகளிலிருந்து தக்கவைகளைத் தமிழ்ப் படுத்தியும் வந்தேன். அவைகளில் புத்துணர்ச்சியும் புது முறைகளும் உண்டு. பழைய நடைக்கும் செய்யுட் கொள்கைகளுக்கும் முரண்பாடும் இருக்கலாம். அவைகளைப் பதிப்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கவில்லை. ஆனால் அவைகளைச் சில நண்பர்களுக்குக் காட்டியதில் அவைகளை வெளியிடும்படி கூறினார்கள். ஒரு நாள் ஒரு நண்பர் அவைகளை நோக்கினதில் அவைகள் இளைஞர் மனப்பான்மைக்கு ஒக்கும் நிலையில் இருப்பதாகச் சொல்லிச் சிலவற்றைப் பொருக்கி எடுத்தார்கள். அவைகளை வெளியிடும்படி வேண்டிக்கொண்டார்கள். அவ்விதமே 42 பாடல்களைப் பொருக்கி இந்நூலில் வெளியிட்டிருக்கிறேன். இவைகள் எதுகாறும் பயன் கொடுக்கும் என்று நான் சொல்ல முடியாது. இளைஞர்

களுக்கென்று எழுத வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதாதவை ஆகையினுல், இவைகளில் அவ்வெண்ணம் முற்றுப் பெறுமலிருக்கவும் கூடும். ஏதாவது பயன்படுமாகில் அது ஈசன் அருளே ஆகும்.

இச்செய்யுள்களை ஆராய்ந்து பல திருத்தப்பாடுகளைச் செய்து, நான் செய்யுள் எழுதும் முறையில் அடிக்கடி உதவி புரிந்து ஊக்கம் தந்த எனது நண்பர் திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும்; இந்நூல் அச்சிடு கையில் எனக்குப் பெரிதும் உதவி புரிந்த எனது நண்பர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களுக்கும் என் நன்றி எக்காலும் உரியது.

கோவை பிரசோத்பத்திப் பங்குனிஉத்திரத் திருநாள். } ம. இராமச்சந்திரன், 22—3—32.

பொருள் அடக்கம்.

பக்கம்.

I. கடவுள்.

1.	கடவுள்.	1–2

2. II. ஞாயிற்றின் தோற்றுவாய்.

3.	ஞாயிறு ஒடுக்கம்	2–3
4.	நிலா	3–4
5.	மாலைப் பிறை	5
6.	மேகங்கள்	6
7.	மழை	7
8.	ஆறு	8
9.	மலை	9
10.	பூ	10
11.	மல்லிகை	11–11
12.	முல்லை	12
13.	தாழை	13
14.	கரும்பு	14
15.	சோளம்	15
16.	நெல்	16
17.	ஈசல்	17
18.	தும்பி	17
19.	காக்கை	18

III. விளையாட்டு விழா முதலியன.

20.	விரலைத்தா	19
21.	விரலைப்பிடி	19

எண். பக்கம்.

22. கல் விளையாட்டு 20–21
23. விரல்ஜவுத்தாடல் 22–23
24. பந்தடித்தல் 23–24
25. கொலுவு 25
26. விஜயதசமி 26
27. கார்த்திகை 27–28
28. திருவாதிரை 28–29
29. புதிய ஆண்டு 30
30. ஆகாய விமானத்தில் முதல் அநுபவம் ... 31–32

IV. பொதுப்பண்புகள்.

31. நாட்டுப்பற்று அல்லது தாய்நாடு ... 33
32. கல்வி 34
33. தொழில் 35–36
34. முயற்சி 36–37

V. சிறு கதைகள்.

35. மலையும் அணிலும் 37
36. பெருங் கடலும் சிற்றாறலும் ... 38
37. இடுகுழியும் புதுமலரும் 39–41
38. படிப்பும் அறிவும் 40–40
39. யூகம் 41–43
40. வணிகனும் மீகாமனும் 44
41. ஹாதிம் தாயி 44–53
42. அபூர்வபலி 54–57
43. பாடல்களின் முதல் குறிப்பு அகராதி ... i—xi

மெய்ப்பொருள் துணை.

இளைஞர் பாடல்கள்.

1. கடவுள்.

1. உருவுடல் மனமுதல் உலகமும் போகமும்
அருளினில் படைத்திடு வீரே
அருளினில் படைத்திடு வீரெனில் அவையெலாம்
இருமுயிர் இன்புறு மாறே.

2. கருவுடை உடல்முதற் கரணமும் மற்றவை
கருணையிற் காத்திடு வீரே
கருணையிற் காத்திடு வீரெனிற் கருதவே
அருவுயிர் அன்புறு வாரே.

3. விதமுள உடல்முதல் வினைசெயு மவையெலாம்
முதலதில் ஒடுக்கிடு வீரே
முதலதில் ஒடுக்கிடு வீரெனில் உயிர்களும்
இதமதை எய்திடு வாரே.

4. இருமுயிர் தமையெலாம் இருவினைப் போக்கியப்
பொருளினில் மறைத்திடு வீரே,
பொருளினில் மறைத்திடு வீரெனில் அனுபவம்
அருவுயிர் அடைந்துறு வாரே.

5. உயர்நிலை அடையவே உகந்திடும் அனுபவம்
உயிர்களுக் கருளிடு வீரே
உயிர்களுக் கருளிடு வீரெனில் உறுவரே
துயரறத் தூய்பதம் நேரே.

6. மைந்தரின் உயிர்வகை மகிழ்ந்துயும் வண்ணமே
ஐந்தொழில் செய்திடு வீரே
ஐந்தொழில் செய்திடு வீரெனில் உம்முடை
மைந்தரும் வீடடை வாரே.

2. ஞாயிற்றின் தோற்றுவாய்.

1. காலையில் நாடொறும் காற்றினை வாங்கவே
சோலையாய்ப் பனைகளும் சூழ்ந்திடும் இடம்புக
ஆலையைத் தாண்டியே அயம் வழி நடக்கையில்
கோலமாம் ஞாயிறே குலாவியே தோற்றுவாய்.

2. உதித்திடும் நிலைமையில் உற்ற நின் பொன்னிறம்
மதித்துமே நோக்கிட மகிழுவர் எந்தமர்;
குதித்துமே மேலெழும் கொள்கையில் நீயுறும்
கொதித்திடும் எரிநிறம் கூசிடும் கண்களை.

3. பிறந்திடும் பொழுதினில் பேருருப் பூணுவை,
சிறந்திடும் அவ்வுருச் சிறியதாம் மேலெழ;
நிறந்தனிற் கொதித்திடும் நிலைமையும் தகுதியாய்க்
குறைந்திடச் செய்யவோ கொண்டனை சிற்றுரு?

(கு—பு.) செ. 1. சோலையாய்ப் பனைகள்—பனங்காடு
ஆலை—நூல் ஆலை
அயம் வழி—இருப்புப்பாதை வழி
இவை கோவையில் உள்ளன.

4. ஞாயிறே, உதிக்கநீ நல்கிடும் இன்பெலாம்
போயிடும் நடுப்பகல் புகஉறும் வெம்மையால்;
ஆயினும் உலகினுக் காருயிர் தருதலால்,
நீயிடும் கிரணமும் நிறுத்திடும் நடுநிலை.

3. ஞாயிற்றின் ஒடுக்கம்.

1. வேலையில் பகலெலாம் வியர்வினும் வழக்கிடுஞ்
சாலையில் மனதெலாம் சலுப்பினும் கழித்திட
மாலையில் உலாவவே மனதுதான் இசைந்திடச்
சாலவும் நடக்கையிற் சாய்வையே மேற்றிசை.

2. மலைகளைக் கடந்துநீ மறைந்திடும் வேளையில்
தலைகளை எரித்திடும் தாபனக் கிரணமும்
அலைகளை வீசிடும் அருங்கடல் நீரெனக்
கலைகளை ஒடுக்கியே காணுவ தென்கொலோ!

3. மேற்கடல் சாய்ந்திடும் வேளையில் விண்தனின்
நாற்கடை பலநிற நகையெனப் போர்ப்பையே;
மேற்குவ டுறைந்துள வேளையில் நீகொளும்
சூர்க்குணம் தாழ்கையில் தொலைந்ததென் கூறுவை!

4. மக்களும் பணமது மலிந்திடிற் செருக்கினை
மிக்கவே கொள்வரால் மிடியரை வருத்தியே
சிக்கவே மிடிதனிற் சிதைந்திடும் பொழுதவர்
தக்கவே தோன்றுவர் தண்மைசெய் பண்பிலே.

(கு—பு.)செ. 1. வழக்கிடும் சாலை—கச்சேரி
செ. 3. சூரியன் சாயும்போது வானில் பலநிறங்கள் காணுதல்.
4. செல்வர் வறியர்ஆகில் கொள்ளும்குண வேற்றுமைக்கு உவமை.

4. நிலவை விளித்தல்.

1\. அடுக்கி அடுக்கி அலைபோன்மேல்
அண்ட முழுதும் அகல்வெண்கார்
உடுக்கள் தம்மை ஒளித்தாலும்
ஒளியா உன்னை ஒண்ணிலவே,
உடுக்கள் தம்மை ஒளித்தாலும்
ஒளியா திருப்பின் உவாமதியோய்,
தடுக்க இயலும் தன்மையதோ
தளிர்போல் நீயும் தருமகிழ்வை!

2\. நாட்டம் மழுங்க நலிந்திடச்செய்
நனிவெண் மேகம் நினைச்சுற்றிக்
கோட்டை கட்டிக் கொடுத்தாலும்
கொள்ளாய் காவல்* குறுநகையோய்,
கோட்டை கட்டிக் கொடுத்தாலும்
கொள்ளாய் எனிலே கோமதியே,
வாட்டம் உற்றே வாடிடுவாய்
வளைவும் சிறையாய் வளைந்திடலால்.

3\. நெருப்பில் மாசு நிலையுறல்போல்
நின்றன் முகத்தே நிறைவாக
கருப்புப் புள்ளி கவர்ந்திடினும்,
கவராய் காந்தி கவின்மதியே,
கருப்புப் புள்ளி கவர்ந்திடினும்
கவரா தளிப்பின் கவின்ஒளியை
திருப்பிப் பேசாத் திகழ்அறிவோர்
தேறுநர் குணத்தால் திகழ்ந்திருப்பாய்.

குறிப்பு:—இவை எழுதின நாள் இரவு 9 மணிக்கு ஆகாயத்தில் வெண் மேகம் முழுதும் பாவி யிருக்க, நட்சத்திரங்கள் ஒன்றும் தெரியாது வெண் நிலா மழுங்கித் தோன்றிற்று. சிறிது நேரத்தில் மேகம் குறையச் சந்திரனைச் சுற்றி வட்ட ஒளி பெரிதாக விளங்கிற்று. பிறகு சிறிது நேரத்தில் மேகம் போய்விட அரைச் சந்திரன் தன் முகத்தே கறை விளங்க பிரகாசித்தது. இம்மூன்று நிலைகளையும் கண்டு மகிழ்ந்து வருணித்தது இதுவாகும்.

5. மாலைப் பிறை.

1. ஞாயிறு மறைந்தொரு நாழிகை ஆகிலீம்
ஆயிருள் கிழுதித் தார்ப்பரித் தோட்டிட
போயிரும் மேற்கொளி புல்லொளி ஆகிடத்
தீயிடும் நிறத்தொளி செவ்வொளி ஆயிடும்.

2. மேற்றிசை வானமும் மேல்மலை மீதெலாம்
கூற்றதன் நிறமெனின் குருதியின் நிறமதாய்
தோற்றிட அருகினில் தோரணம் போலவே
ஏற்றிடும் வெண்பசும் இயல்நிறம் வானமே.

3. மெல்லிய வளைவினின் வளர்பிறை ஒன்றுமே
அல்லிவெண் வண்ணமும் அமைந்துள தன்மையில்
சொல்லியல் அமைவுறச் சோபையில் தோன்றுமே
நல்லிருள் தன்மையை நலமுறச் செய்துமே.

4. பிறையினைக் காணலும் பிறிதெதும் நினைகிலேன்
மறைதரும் சிவபரன் வளர்சடை அழகுற
உறைவிடம் கொண்டிடும் உன்னத மறிந்தியான்
அறைதலும் தகுவனோ அதன்றிறம் முற்றுமே?

(கு—பு.) மாலையில் பிறைதோன்ற அக்கால் வானத்து இயற்கை வருணனை.

செ. 4. சிவபெருமான் பிறைசூடினதை நினைப்புற்றது.

6. மேகங்கள்.

1. மேகங்காள், வைகறையில் மேற்கிருந்து வடகீழ்பால்
வேகந்தான் உற்றவராய் விடியலின்முன் செல்வீரே,
சாகந்தான் நீரின்றிச் சாருந்தான் எனஉருகித்
தாகந்தான் தீர்த்திடவோ தாமதியா தேகின்றீர்.

2. கொங்கர்நா டெங்கெங்கும் குளிர்மழைதான் இல்லாதே
பங்கந்தான் படுவதையே பார்க்கவுநீர் வாரீரோ,
அங்கந்தான் வெளிதிருக்கும் அருஞ்சிறுமைத் தொகுதிகளாய்
மங்கித்தான் வருகின்றீர் மழையினைநீர் தாரீரோ.

3. சிறுதுளியும் தரகில்லீர் சிற்றுணவும் தந்துதவீர்
உறுமுளைகட் காறுதலை உற்றிடுவான் வந்தீரோ,
அறுதுளிக்கு மாறாக அருந்தென்றல் வீசிடவும்
முறுவலித்துச்சிலபயிர்கள் முளைப்பிப்பான்செல்வீரோ.

4. வெற்றுரையால் ஈகையென வேண்டிடும்ஓர் செல்வன்போற்
குற்றுயிராம் பயிர்முளைகளுக் குளிர்வளியைத் தந்தீரே,
வெற்றுரையும் மிடிதன்னால் வெளியேக மாய்வதுபோல்
குற்றுயிரும் தவிப்பனவால் கொடுந்தபனன்உதிக்கவுமே.

5. மேகங்காள் நும்மினத்தார் மேற்றிசையில் மிளிர்கின்றார்
தாகந்தான் இல்லார்க்கே சரமாரி பொழிகின்றார்,
ஆகந்தான் சிறுத்தவரீர் அணுகுவதில் பயனில்லை
வேகந்தான் திரும்பிப்போய் உற்றாரை வரவழைமின்.

குறிப்பு:—இன்று காலை சிறு மேகங்கள் வாளையாற்றிலிருந்து வடக்கே ஓடுவதைக் கண்டு எழுதியது.

(கு—பு.) செ. 1. சாகம் தான்—மாவகை தாம்.
செ. 2. கொங்கு நாடு மழையின்மையால் வருந்தின போது மேகங்களை நோக்கி பாடியவை.

7. மழை.

1. மழையே, வருவாய் மன்னுயிர் உய்ய
இழையோர் உருவில் இருவிசும் புற்று
விழைவாய் நிலத்தை விரைந்தே அணுகிக்
குழையச் செய்தே குதுகலம் தருவாய்.

2 சிசுமுதல் மூத்தோர் சீருடைப் பெண்டிர்
பசுமுதல் நாற்கால் பலவின மாக்கள்
முசுமுதல் கானல் முரட்டு விலங்கும்
கசிவுறும் நின்னிடம் கருணையே காண்பர்.

3. நிலத்தை உடையோர் நின்முகம் பார்த்து
நலத்தை எய்தும் நாட்டம் எண்ணுவர்,
பலத்தை அளிக்கும் பலவகை மரவினம்
சலத்தை நின்றன் சார்பில் அடைவார்.

4. புல்லும் பயிரும் பூங் கொடி பலவும்
அல்லும் பகலும் அண்ணாந் திருப்பது
வில்லை விளைத்து விடாமழைச் சாத்தை
வல்லே எய்துன் வருகையைக் காணவே.

5. ஊற்றும் குளமும் உயர்நதி யாவும்
நூற்றுக் கணக்கில் நுகரும் வண்ணம்
ஏற்றுக் கொள்ளும் எழில்நீர் எல்லாம்
போற்றும் உன்றன் புகழால் அன்றோ.

6. மலையும் நிலமும் மன்னுயிர் போற்றும்
நிலையும் தன்மையும் நிகழப் பெறுதல்
அலையார் கடலின் அகல்நீர் முகந்து
தலையால் பெயும்உன் தகையால் அன்றோ.

7. நடப்பன ஊர்வன நாடிப் பறப்பன
கிடப்பன துளைப்பன கேடில் உயிரெலாம்
திடப்பட் நின்னையே தேடிஉய் குவரேல்
இடப்படும் நின்னுயர்வு என்றும் அளக்கிலோம்.

8. யாறு.

1. வந்தார் போனார் வழித்தே குடிப்பார்,
இந்தா எனவே என்றும் எழில் நீர்
தந்தாய், யாறே!, தனிநின் செயலின்
நந்தா விளக்கும் நனி நாண் உறுமே.

2. மலையில் பிறந்தாய், வண்டல் உறுவாய்,
விலையில் பொருளை விரைந்தே கொணர்வாய்,
அலையில் நுரையில் அணுகிப் பாய்வாய்,
தொலையில் சமனில் தோன்றிச் செல்வாய்.

3. காட்டை அணுகக் கான்யா றுவாய்,
தோட்டம் பாயத் தொடுகால் உறுவாய்,
நாட்டம் கொள்ளும் நாவாய் புரள
ஓட்டம் அடையும் உணர்வும் பெறுவாய்.

4. புன்செய் நிலத்தோர் புதுமை பெறவே
நன்செய் நிலமாய் நனிதான் செய்வாய்,
இன்செய் பண்பும் இனிதே கொளலால்
பொன்செய் வண்மை பொருந்தவே நிற்பாய்

5. இயற்கை அழகோ இருபால் கொள்வாய்
செயற்கை அழகும் செறித்தே நிற்பாய்
முயற்சி எடுத்து முதற்கண் மக்கள்
வயற்கண் ஆக்கும் வண்மையும் உனதே.

6. மக்கட் குணவை மகிழத் தந்தே
ஒக்கல் எவற்கும் உறுதி பயப்பாய்
மிக்கெப் பரிசும் விரும்பா தாறே,
புக்குப் பரவை புனிதம் செய்வாய்.

9. மலை.

1. கல்லாய் மண்ணாய் காடாய் முரடாய்
வல்லே நிற்பாய் வனத்தோ டெனினும்
எல்லார் நெஞ்சில் இனிதாம் உருவாய்ச்
செல்லா நிற்பாய் சேணில் பார்க்கில்.

2. நாட்டிற் கரணாய் நடுவே நின்று
மூட்டும் பகையை முளையில் தவிர்ப்பாய்
கூட்டிப் பெயலைக் குவியச் செய்தே
ஊட்டி வைப்பாய் உலகுக் குணவை

3. வண்டல் தன்னை வளநா டேற்றிப்
பண்டம் யாவும் பாங்காய் விளைப்பாய்
கொண்ட நோய்கள் குணஞ்செய் மருந்தை
அண்டும் மக்கட் கரிதில் தருவாய்.

4. நீயும் இலையேல் நிலத்தில் உண்டோ
ஆயும் அழகும் அமையும் வளமும்
தோயும் மழையும் துளிரும் செடியும்
பாயும் ஆறும் பரந்த பயிரோ ?

5. நினைப்போல் எதுதான் நிலத்தில் உண்டே
பனைப்போல் நின்றன் பருமன் இருக்க
தினைப்போல் எங்கள் திடமும் கிடக்கும்
நினைப்போம் நினையே நெடுங்கால் மலையே.

10. பூ.

1. பூவே பூவே பூக்கும் பூவே
வாவா என்றன் வதனத் தருகே,
பூத்த மகளிர் பூர்ண முகமும்,
ஏற்ற தனக்கே எழிலில் என்பர்
மணமும் இலையே மங்கை முகத்தில்,
குணமும் உனைப்போல் கொளலும் உண்டோ.

2. மலரே, மலரே, மருவார் மலரே,
சிலரே உனக்குச் சிறப்பைத் தருவார்,
மணந்த மகளிர் மருவிக் கொளலும்,
இணைந்த பண்பும் உளலால் எனவோ,
மணந்தபோது மணத்தை இலரால்,
அணைந்த தாலே அடைவார் அன்றோ?

3. பூவே, பூவே, புதுமைப் பூவே,
ஈவாய் ஒருசிற் றியற்கை நலமும்,
குழந்தை வதனம் குலவி மகிழ்வேம்,
மழலைச் சொல்லின் மகிழ்ச்சி உண்பேம்,
குழந்தை வாயின் குமுத மழலை,
எழுந்த மனத்திற் கெங்கே ஒக்கும் ?

4. மலரே, மலரே, மகிழ்வாய் மலரே,
சிலரே உன்றன் இயற்கை அறிந்தார்,
மணமும் நினக்கு மகிமை தருமே,
குணமும் ஒன்றே கொண்டாய் அல்லை,
பற்பல மணத்தில் பற்பல் பண்பில்
உற்றதும் உனக்கே உயர்வும் தருமே.

5. பூவே, பூவே, புனிதப் பூவே,
ஆவாய் எனக்கே ஆசாரியனாய்,
மதுவும் மணமும் மறையா தளிப்பாய்,
அதுவும் கைம்மாறன் றி யன்றோ,
ஆசா ரியனும் அப்பண்படையான்,
பேசா உதவி பெருமைத் தன்றோ.

11. மல்லிகை.

மல்லிகை மலரே மகளிர் கூந்தலுட்
புல்லவும் சுற்றவும் புகுத்துவர் உன்றனை;
கூந்தலின் கருமை கூட்டிக் காட்டவோ,
ஏந்து நின் வெண்மையை ஏற்றித் தோற்றவோ,
பிரானுருத் தன்னை பிணைக்கும் தொடைபோல்,
இராவுறும் மலரே, இணங்கினை கூந்தலை;
மணமிலாக் கூந்தலில் மணந்தரும் நெய்யினை
வணமெலாம் செறிக்க வகுப்பர் மங்கையர்,
நின்றனைப் பின்னர் நிறைத்திடில் நீயோ
குன்றிடச் செய்வாய் குளிர் நெயின் மணத்தை,
மங்கையர் பாலுறின் மங்கையர் பண்பெலாம்
தங்கிக் கொண்டதோ தளிர்வெண் மலரே;
கட்டி உயர்த்தலும் கண்டதைத் தாழ்த்தலும்
ஒட்டிக் கொண்டதோ உன் வெள் ளிதழில்?

12. முல்லை.

முல்லைப் பூவே முல்லைப் பூவே,
தொல்லை நாளில் தொலைவிலா அளவில்
முருகன் பூண்டி மூதூர் தலத்தே
பெருகிப் பூத்ததும் பெரியோர் மொழிவர்,
இற்றை நாளில் எங்கே ஒளித்தனை,
அற்றை நாளில் அரன்றன் முனைக்குத்
தூதாய்ச் சென்று தூய்பணி செய்தனை,
ஏதோ எந்தம் ஏழை நெஞ்சம்
பொழியும் அன்பும் பொருந்திய அழுகையும்
விழுமிய உன்றன் மிகுமணத் துடனே
அரனை அணுகி அழகுடன் செலுத்தச்
சிரனைத் தொழுது சீறடி யுறுவாய்.
உன்றன் தூதும் உயரிய வகையில்
இன்றிய செலவில் இயற்றித் தந்தனை,
ஆனால் இக்கால் அரனிடம் முறைசொலப்
போனால் எதிரிடும் புதியோன் எவனே,
அழுக்கா றுடையோன் அளவில் ஆசையன்
கொழுக் காசின்றிக் கொஞ்சமும் நடவான்,
அந்தணன் என்பான் அழுக்கே உருவினன்
செந்தண்மை பூணான் சினத்தில் மிக்கோன்
இம்மணம் கொண்ட இந்நாள் தூதுவன்
எவ்வணம் ஈசனை ஏத்துவன் ஆதலால்
தொல்லை நாட்போல் தூதும் செல்ல
முல்லைப் பூவே முன்வரு வாயே.

(கு—பு) பெரியோர்—சுந்தரமூர்த்திகள்
திருமுருகன் பூண்டித் தேவாரத்தில் காண்க.
அந்தணன்—திருக்குறள்.

13. தாழை.

தாழாய் தாழாய், தழைமூட் டாழாய்
ஆழிக் கரையில் அகன்ற செய்களில்
வேலிக் கழகாம் வெண்மடல் தாழாய்,
சாலிக் கோடும் தண்ணீர்க் கால்களின்
ஓரம் சாய்ந்து உடைபடா வண்ணம்
வேரும் ஊன்றி விளங்கிடும் தாழாய்,
செந்தமிழ்க் கவிக்குச் செவ்விய விருந்தாய்
அந்தமா முவமை அணிபெற அருளுவை.
மதுரைக் காஞ்சி மணியா சிரியர்
சிதலுடை காய்களை சினக்கட லோரம்
நின்றன் கிளைகளில் நிற்கக் கண்டு
துன்றிடு முழவாய் தோன்றக் கூறினர்.
பரஞ் சோதியாரும் பகரிள வேனில்
கரஞ்சேர் வாளெனக் கைதையை உரைப்பர்.
ஔவையாரும் அகன் மடல் ஊற்றும்
வவ்வா மணத்தாம் வசைச்சொல் இடுவர்.
இத்தனை கவிகட் கின்னுண வளிப்பினும்
எத்தனை மகளிர் எழிற்குழல் ஏறினும்
உமையொரு பாகற் குகந்த மலராய்
அமைவுறும் பெற்றி அடைந்தனை இல்லை,
அறந்தான் எத்துணை ஆற்றிலும், அழகோ
நிமிர்ந்தே பிறரெதிர் நிற்கும் நிலைமை?

(கு—பு) தாழைக்காய்—முழவு போன்றிருத்தல்—மதுரைக்காஞ்சி (பத்துப் பாட்டு) யில் காண்க.
பரஞ்சோதியார்-திருவிளையாடல் சண்பக மாறன்சரிதை "கைதை வாளெடுப்ப"
ஔவையார்—"மடல் பெரிது தாழை"

14. கரும்பு.

1. இனித்தல் தின்னிடத் தியங்குறும் வகையில்
செனித்த உயிரெலாம் சீர்தரும் கரும்பே,
தனித்த அடிப்புறம் தலைசிறந் திருப்பின்
குனிந்த நுனியிடம் கைப்பது தானேன்?

2. சர்க்கரை நின்னிடம் சார்ந்துறும் வகையில்
எக்கரை வழியிலும் ஏற்றுவர் நின்னை
ஒக்கலில் வாழ்பவர் உன்றனைக் கொண்டால்
மிக்கவே வாட்டிடும் மீக்குணம் கொண்டாய்.

3. சுவைதான் நீயுமே சுமந்திடும் பேற்றில்
எவைதான் நின்றனை இணங்கவே அணுகா!
அவைதான் அணுகவே அன்பினை ஈட்டும்
சுவைதான் நின்றனைச் சுழித்திடும் அன்றோ?

4. கரும்பே உருகிநின் கருவிலே பிறந்தும்
தரும்பே றுனக்கினி கருமையாய்ச் செயுமோ?
இரும்பார் ஆலையில் இறுக்கியே விட்டு
விரும்பாச் சக்கையை விலக்கிடும் தனியே.

5. மக்கள் வாழ்வினில் மதித்திடும் பொருளும்
ஒக்க உன்றனைக் குவமையாய் உளதால்,
தக்க பண்புடைத் தனயரும் தவிக்க
துக்க வாழ்வினின் தொடர்பெனச் செயுமே.

(கு—பு) செ. 1. கரும்பின் இயற்கை அடிப்புறம் இனிப்பு தலைப்புறம் கசப்பு.
2. கரும்பு சாகுபடி செய்வோர் மிகுந்த முதல் போட்டு அதிகமாய் பாடுபட்டால்தான் பலன் தரும், இல்லெனில் எல்லாம் வீண்

15. சோளம்.

1. ஏழைக் குடிகளுக் கேற்ற நல் உணவே,
பேழை வயிற்றினைப் பெரிதுமே வளர்ப்பாய்,
ஊழை என் சொலி உதறுவன் யானே
கோழை அரிசினைக் கொண்டனர் விட்டினை.

2. நான்கு மதிகளில் நனிகதிர் விடுப்பாய்
தேன்கொள் முத்துகள் தெரிந்திட நிற்பாய்
கான்கொள் ஆற்றுநீர் கைப்பணி வேண்டாய்,
வான் கொள் மழையுமே மலிவுறும் என்பாய்.

3. மக்கள் தாமுமோ மாபயன் பெற்றார்
தக்க தட்டினை உட்கொளும் கால்நடை
மிக்க சத்துறும் மேல் பொருள் செய்வர்,
ஒக்க கரும்பொடு ஓங்கிட இணைப்பர்.

4. இன்ன வகையினில் இன்பயன் அளித்தும்
தின்ன வகை யிலாச் சிறுதொழி லாளர்
மன்னு சிறு பொருள் வழங்கிடச் சேர்ந்தால்
என்ன கிறுகிறுப் பெய்துனை மறப்பர்.

5. மனிதன் இயற்கையில் மாறிடும் கொள்கை,
நனிஉன் இயற்கைஎந் நாளினும் மாறா
தினி எம் இயற்கையை இயம்பிடல் எளிதோ
சனி தன் இயற்கையும் சலித்திடும் எனிலே.

(கு—பு.) 1. சோளத்தில் சத்து அதிகம் நெல்லில் குறைவு.
3. சோளத்தை கரும்போடு நட்டுச் செய்து மிக்க பலன் உண்டாக்கும் விதத்தை விவசாயக் கலாசாலையில் கண்டுபிடித்துள்ளார்.

16. நெல்.

1. நெல்லே! நின்பயிர் நிலமகள் தனக்கு
வல்லே பசும்படாம் வகித்திட உதவும்,
ஒல்லே நீபிரிந் துதிர்ந்ததன் பின்னர்
எல்லே அவளுமே இழந்தவள் ஆவாள்.

2. நின்னை வேட்கவே நிலமகள் போர்வை
தன்னை அணிந்திடத் தருகுவை சிலநாள்,
பின்னைத் துறந்திடப் பேதுறும் அவளும்,
என்னை நின்குணம் இழிபொருள் தகைத்தோ?

3. நீயும் நிலமகள் தனக்குறு பைம்மணம்
ஈயும் வகையினல் இணங்குவர் செல்வர்
ஆயும் காலையில் ஆற்றுநீர் குன்றிப்
போயும் காலையில் புகழ்ந்ததும் எங்கே?

4. செல்வர் விழைவுறும் செழுஞ்சுவை கொள்வாய்
அல்லார் வேண்டிடும் அருஞ்சத்து உண்டோ?
இல்லை என்னிலும் இந்திய மக்கள்
பல்லை இளிக்கவே பாவுவர் உன்னை.

5. உலகம் இவ்விதம் உண்மையும் அறிவாய்
பலகற் றிருப்பினும் பயன்தனை அறியார்
கலக லென்பதில் காரியம் கொள்வர்
திலக அளவிலும் திறத்துளே நோக்கார்.

17. ஈசல்.

வருவாய், மழைதான் வரவே, ஈசல்!
வந்தேன் நோக்க உனைதான் வாசல்;
எழுவாய் புற்றில் இறக்கை ஓடு
போவாய் பறப்பாய் புகுவாய் வீடு;
விளக்கைக் கண்டால் விரைவாய்ச் சுற்றி
துடித்துத் திரிவாய் துணிச்சல் பற்றி,
இறகும, அந்தோ, எளிதில் உதற
மேலும பறக்க நீயும் பதர
பூமி மீது நடந்தே இளைப்பாய்,
காமி போல உயிரைக் களைப்பாய்.
நீதான் உற்ற நிலையா வாழ்வை
அறிந்தும் மனிதன் அறியான் தாழ்வை

18. தும்பி.

நீண்ட வாலோ, நிறைந்த சிறகோ,
மெலிந்த காலோ, குனிந்த புறகோ?
ஒடுக்க வயிறோ, உருண்ட தலையோ
வழுத்த முகமோ வழுத்த நிலையோ
எதுதான் வானில் எளிதில் பறக்க
உனக்கே தும்பி உதவும் சிறக்க ?
இவைதம் இயற்கை எளிதில் பற்றி
உற்றோர் கலையின் உளவு முற்றி,
மேற்கின் நிபுணர் வானில் ஏகும்
வாயு விமானம் வலிதில் ஆகும்
இயல்பை நினைப்பார்த் தறிந்தார் என்கோ!
நின்னை அறியாய் நீயும் என்கோ!

(கு—பு.) இப்பாவும் பின் வரும பாக்களும் ஆங்கிலக் கவியை ஒட்டி ஈற்று எதுகை (Rhyme.) ஆகப்பாடியவை.

(கு—பு.) ஆகாய விமானம் தும்பியின் அமைப்பை நோக்கி இயற்றிய தென்பர்.

19. காக்கை.

1. காக்காய், கறவா கரைந்தே உண்பாய்
உலகம் அறியும் உனதாம் பண்பாய்
உறவைக் கூட்டி உண்டிடில் ஆக்கம்
அதனில் அமையும் அளவில் ஊக்கம்.

2. நினக்கே உற்ற நிறமோ கருமை
அதிலே காண்பர் அளவில் பெருமை
பொய்ம்மை விளக்கப் புகல்வர் நின்றால்
நிறத்தில் வெள்ளை எனுஞ்சொல் தன்னால்.

3. தாயின் அன்பைத் தனித்துக் காட்ட
நீயுன் குஞ்சை நினைந்தே ஊட்ட
கொஞ்சும் தன்மை கொள்வர் தனிலும்
குஞ்சின் அழகும் குறைவே எனினும்.

4. கங்கை படிந்தும் கடிதே மாறாய்
பண்பைப் பகர்வர் பரிந்தே கூறாய்
ஈசன் தந்த இயல்பும் போமோ
ஆசை உறினும் அன்னம் ஆமோ.

5. விரும்பும் கனியோ வேம்பே என்பர்
அதையும் மக்கள் அன்பில் தின்பர்
இதுவாம் புன்மை எனவே சிறியேன்
எதுவாம் நன்மை எதையும் அறியேன்.

(கு—பு.) செ. 1. காக்கை கறவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீராக்காதே உள. திருக்குறள்.
2. காக்கை வெளிதென்பார்.
3. காக்கைக்கு தன்குஞ்சு பொன்குஞ்சு.
4. கங்கையில் படிந்தாலும் காக்கை அன்னம் ஆகுமோ.
5. வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி.

20. விரலைத்தா.

உந்தன் விரலைத்தருவாயே என்னம்மா விரலைத்தருவாயே
அந்தம் ஆன இடங்கட்கு, யானும் வருவேன் உன்கூட
எந்த நாயும் குலைக்காதே, எந்தப்பூனைப் பாயாதே
தந்தே எனக்குத் தயவுடனே, தாயே விரலைத் தருவாயே.

தாயே விரலைத் தருவாயே, தனியே என்னை விடுவாயோ,
தீயார் என்னைத் தீண்டாமல், தெருவில் தப்பிப் போகாமல்
நாயும் அண்டி நக்காமல், நணுகி வந்து கடிக்காமல்
சயாய் எனக்கு விரலினையே இரங்கிக் காட்டாய் இன்பமுமே.

அம்மா விரலை அருளுவையே அணிசேர் விரலை அளிப்பாயே
சும்மா பேசில் சுகமில்லை, சுட்டு விரலில் சுவையுண்டே
எம்மான் இருக்கும் எழிலிடங்கள் எனக்குக் காட்டும் எண்ணத்தே
அம்மா எனக்கு அருளுவையே அருகு விரலை அளிப்பாயே.

21. விரலைப்பிடி.

பிள்ளாய் விரலைப் பிடிப்பாயே, பிணைத்தே விரலைப் பற்றுவையே
பள்ளம் முதலாம் பலவிடங்கள் பாறைமேடு பரந்திருக்கும்
கள்ளர் வாழும் காரிடங்கள் கடிதே நடந்து கடந்திடவே
மெள்ள எந்தன் விரலினையே மெதுவாய்ப் பிடித்து வருவாயே

கண்ணே பிடிப்பாய் கடைவிரலைக் கண்டு வருவாய் கவனமுமாய்
மண்ணின் பற்பல மறைவிடமும் மாயம் செய்யும் மாக்களையும்
எண்ணித் தெரிந்து எளிதினிலே ஏமாறாதே விலக்கிடவே
அண்ணே வருவாய் என்னுடனே அணுகி விரலை அணைத்திடுவாய்

அப்பா விரலைப் பிடிப்பாயே அருகில் வந்தே அணைவாயே
இப்பாரிடத்தில் இன்பமதை ஏற்கும் வண்ணம் இயங்கிடவே
தப்பா வகையில் தனியொருவன் தானே அணுகித் தாழ்ந்திடவே
அப்பா வருவாய் அருகினிலே அணுகிப் பிடிப்பாய் அரும்விரலை.

(கு—பு.) குழந்தை தாயை விளித்து வெளியில் போகும்போது விரலைத்தாச் சொல்லல்.

(கு—பு.) தாய் குழந்தையை வெளி யேறும்போது கைப்பிடிக்கச் சொல்லல்.

22. கல் விளையாட்டு.

1. ஒன்றாங் கல்லே ஒருதனி முதல்வன்
இரண்டாங் கல்லே இமையவர் பெருமான்
மூன்றாங் கல்லே முக்கண் மூர்த்தி
நான்காங் கல்லே நஞ்சுண்ட கண்டன்
ஐந்தாங் கல்லே ஐந்து முகத்தோன்
ஆறாங் கல்லே ஆற்றுச் சடையன்
ஏழாங் கல்லே எமனை உதைத்தோன்
எட்டாங் கல்லே எருத்து வாகனன்
ஒன்பதாங் கல்லே உமை ஒருபாகன்.
பத்தாங் கல்லே பத்தர்கட் கபயன்.

2. ஒன்றாந் தாயம் உமையொடு மகனார்
இரண்டாந் தாயம் இமையரை மீட்டோன்
மூன்றாந் தாயம் மூவா முதல்வன்
நான்காந் தாயம் நான்முகற் சிறையினன்
ஐந்தாந் தாயம் ஐயனின் குருவோன்
ஆறாந் தாயம் ஆறுடை முகத்தோன்
ஏழாந் தாயம் ஏறும் மயிலோன்
எட்டாந் தாயம் எரிவேற் கையினன்
ஒன்பதாம் தாயம் வள்ளியை மணந்தோன்
பத்தாம் தாயம் பணிந்தோர்க் கபயன்.

(கு—பு) சிறுவர்கள் சிறுமிகள் கல் விளையாடும் போது பாடுதல்.
செ-1 சிவபிரான் செயல்கள்.
2 முருகக் கடவுள்.

3. ஒன்று மாட்டம் உலகெலா முண்டோன்
இரண்டா மாட்டம் இரணியன் வதைத்தோன்
மூன்று மாட்டம் மூலமாய்த் தோன்றினன்
நான்கா மாட்டம் நாரணப் பெயரோன்
ஐந்தா மாட்டம் அண்டங் காப்போன்
ஆறும் ஆட்டம் ஆனையை மீட்டோன்
ஏழா மாட்டம் ஏழைக் கிரங்கினோன்
எட்டா மாட்டம் இந்திரற் கிளையோன்
ஒன்பதா மாட்டம் உயர் பாற்கடலோன்
பாத்தா மாட்டம் பன்னக சயனன்.

4. ஒன்றும் வித்து உலகம் ஈந்தாள்
இரண்டாம் வித்து ஈசனோர் பாதியாள்
மூன்றும் வித்து மூவாக் கண்ணியாள்
நான்காம் வித்து நாரணன் சோதரி
ஐந்தாய் வித்து அழகுடை உத்தமி
ஆறும் வித்து அவுணரை வதைத்தாள்
ஏழாம் வித்து எரிசூலத்தாள்
எட்டாம் வித்து எங்கும் சோதியாள்
ஒன்பதாம் வித்து ஒளிவிடும் மேனியாள்
பத்தாம் வித்து பர்வத வர்த்தினி

செ-3 விஷ்ணு பகவான்
4 பார்வதிப் பிராட்டி

23. விரல்வைத் தாடல்.

திருவருள் அடிகள் திறம்பா அடிகள்
மருவறும் அடிகள் மாறா அடிகள்
ஆக்கிடும் அடிகள் அளித்திடும் அடிகள்
போக்கிடும் அடிகள் புதைத்திடும் அடிகள்
அருளிடும் அடிகள் ஐந்தொழில் அடிகள்
பொருள்தரும் அடிகள் புண்ணிய அடிகள்.

ஆடிய கழல்கள் அழகிய கழல்கள்
தேடிய கழல்கள் தேரா கழல்கள்
சோதி சேர் கழல்கள் சொக்கிடும் கழல்கள்
மாதுசேர் கழல்கள் மறைதரு கழல்கள்.

அன்புறும் பாதம் அருள் பொழிபாதம்
துன்பறு பாதம் துணைதரு பாதம்
என்புறு கவுமே இனித்துதிப்போமே
சொன்மலி பெயரில் சொலித்திடு முருவினை.

மலரடி மேலே மாப்பெருங் கழல்கள்
கழல்கள் அன்றிக் கணைக்கால் தோற்றம்
தோற்ற மன்றித் துதைந்தெழு தொடைகள்
தொடைகள் அன்றித் துவன்றிடும் இடையே.
இடையும் அன்றி இங்கித ஆடை
ஆடை அன்றி அழகிய கச்சு
கச்சும் அன்றிக் களிதரு மார்பு

(கு—பு.) சிறுமிகள் விரல்களை பிரித்து அகங்கைகளை நிலத்தில் சேர்த்தி விரல்களை எண்ணி ஆடும் விளையாட்டு.

மார்பும் அன்றி மலிந்திடு நூலே
நூலும் அன்றி நுழைந்திடு மாலை
மாலையு மன்றி மகிழ்தரு கையே
கையு மன்றிக் கவின் பெருதோளே
தோளு மன்றித் தொல்விட மிடறு
மிடறு மன்றி மிகுமறை வாயே
வாயு மன்றி வடிவுடை மூக்கு
மூக்கு மன்றி மூன்றுடைக் கண்ணே
கண்ணு மன்றிக் கடிநகைக் காதும்
காது மன்றிக் கவிசெய் சடையும்
சடையு மன்றிச் சலித்திடு கங்கை
கங்கை யன்றிக் கவின்பெரு பிறையும்
பிறையு மன்றிப் பிணிதவிர் முடியும்
முடியு மன்றி முக்தியும் வருமோ
முடிதனைக் கண்டு முத்தினை அடைவோம்.

24. பந்தடித்தல்.

சாரணர் இயக்கம்.

1. முன்னும் பின்னும் முந்தியுந்தி
மூச்சு விட்டுப் பாய்ந்துமே
கன்னம் வீங்கக் கண்கள் ஓங்கக்
கால்கள் தாவ ஓடியே
மன்னன் வாழ்க தேயம் வாழ்க
என்று பந்தடித்துமே
சின்னம் வாழ்க சாரணம் வாழ்க
என்று பந்தடித்துமே.

2. வானம் தாங்க வாரி ஓங்கி
வலிய ஊக்கித் தாக்கியே
தானம் தன்மம் தலை சிறக்கத்
தனயர் ஓடி ஆடியே
மானம் மலிக ஈனம் கழிக
என்று பந்தடித்துமே
தீன நட்புச் சாரணம் பொலிக
வன்று பந்தடித்துமே.

3. கூடி ஆடிக் குலவி நகைத்து
குழுமி மகிழும் சிறுவர் யாம்
பாடி ஆடி பண்ணொடு ருட்டிப்
பந்தை வீசித் தள்ளியே
நாடி தேடும் நன்மை பொலிக
என்று பந்தடித்துமே,
ஓடி யாடும் சாரணம் ஓங்க
என்று பந்தடித்துமே.

4. சினமும் வெட்டி சிறுமை தட்டி
சிக்க னத்தில் சார்துமே
இனமனைந்த வாழ்வு கொள்வம்
என்ற பண்பில் நின்றயாம்
மனதிற் கொள்வம் வாக்கிற் கொள்வம்
மெய்ம்மை என்றடித்துமே
தனது காயம் தனிலும் கொள்வம்
என்று பந்தடித்துமே.

5. அதமம் என்றும் உயர்வி தென்றும்
அறுதியிட்டுப் பார்க்கிலோம்
பதவி யென்ற பதமு மறியோம்
பாங்கர் என்றே அறிவமே
உதவி புரிக பிறவி பெருக
என்று பந்தடித்துமே
இதமே புரியம் சாரணம் பெருக
என்று பந்தடித்துமே.

25. கொலுவுக்குச் செல்லல்.

நவராத்திரியில் சிறுமியர் கொலுவுக்கு அழைத்து செல்லல்.

1. சின்னஞ் சிறுமியர்கள், சிரீதேவி நாளிதுவால்
முன்னம் நடந்திடுவீர் மூடிடுவார் தாழ்க் கதவை
இன்னமும் தாமதமேன் இங்கிதமாய் வந்திடுவீர்
என்னமோ என்றெண்ணில் இன் கொலுவு நின்றிடுமே.

2. தோழிகாள், யாரில்லம் சோதியுடன் தோன்றுவது?
ஆழியான் கோலமெலாம் ஆங்கே அமர்ந்துளதே
ஊழியான் அன்பும் உருவத்தே திகழ்கிறதே
வாழியே என்றேத்தி வான்களிப்பும் கொள்ளுவமே.

3. சிங்காரத் திவ்வில்லில் சீராம் கொலுவிருக்கும்
வங்கார மார்பிடத்தே வாழ்த்தியே உட்சென்று
பொங்கார் சடையுடையான் பொன்போலும் சீரினையே
நங்கைமீர் கண்டு நலமடையும் நாளிதுவால்.

4. பொம்மை பல வுளவாம் பூச் செயலும் பற்பலவே
திம்மன் முதலாம் திகழ் உருக்கள் பற்பலவே
கம்மியர் செய்கை களிப்பிக்கும் பற்பலவே
எம்மை மயக்குமவை இக்கொலுவில் காண்பீரே.

5. கண்ணன் களியாட்டைக் காட்டுவன இவ்வுருக்கள்
அண்ணல் அடல் ராமன் ஆர் செயலும் ஈங்குளதால்
எண்ணம் இவை தன்னால் ஏற்றம் அடைகுவதால்
திண்ணம் நாமெல்லாம் சீர்க்கொலுவைக் காண்போமே.

26. கோவை விஜயதசமித் திருநாள்.

1. மண்கால் உடலொடு மகிழ்நிறம் பூசிய வாகனங்கள்
திண்கால் ஓட்டர் தெருக்களில் எடுத்துச் செல்லுகையில்
கண்கள் அவைதமைக் கண்டு மகிழும் கவினுடைத்தே
தண்கால் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

2. நகுஞ் சீர் கொண்ட நகைமிகு உருவம் நனிமுன்னால்
புகுஞ் சீர் உடைய பிரபா வளிகள் பொலிந்திருக்க
மிகுஞ் சீர் உடனே மிளிர்தே வதைகள் மேல்வருவார்
தகுஞ் சீர் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

3. நகை சேர் மார்பும் நலஞ்சேர் முகமும் நனிபொலிய
மிகை சேர் முடியின் மிளிர்மணிக் கிரணம் மேற்படிய
புகை சேர் விளக்காற் புதுதேர் உருவம் பொலிவடையும்
தகை சேர் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

4. நடமார் மாதர் நவிவுறு முருவில் நடந்தேக
திடமார் அர்ச்சகர் திண்மணி ஆட்டித் திகழ்ந்தேத்த
வடமார் மார்பின் வகைவகை மாந்தர் வழிநடக்கத்
தடமார் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

5. விண்ணெனும் வண்ணம் விளக்குகள் பொலிய வீதியெலாம்
பண்ணெனும் பாங்கில் பலபல மேளம் பலித்திடவே
கண்ணெனு மாதர் கதவைத் திறந்து கண்களிப்பர்
தண்ணெனுங் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

6. அலைகள் போல ஆடிடுந் தொங்கல் விதானங்கள்
இலைகள் கோர்க்க இழைத்துள மகர தோரணங்கள்
குலைகள் தொங்கும் கதலியின் மரங்கள் குவிந்திடவே
தலைமைக் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

7. நவமலி பாணம் நன்குயர் வானம் நனிதுலங்க
பவமலி மக்கள் பற்பலவாகப் புகழ்ந்துரைப்பர்
சிவமலி சின்னம் சிறியோர் பெரியோர் சிரத்தணியும்
தவமலிக் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

8. அமிழ்தம் போலும் அழகுடன் இனிக்கும் அணிகீதம்
கமழ்கின் றறுவால் கனிவாய்க் குழலின் கபடிலதாய்
உமிழ்கின் றதுவாம் உயிர்ப்பினில் வருமே உயர் இசையும்
தமிழ்வளர் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

9. மிளிர்தரு கோலொடு வானினை ஏந்தி மிகுபலத்தாற்
களிதரு வாலிபர் கங்கணம் கட்டிக் கோலடிப்பர்
அளிதரு கருணை அபயம் தந்திடும் அரன்வாழும்
தளிர்தரு கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

10. வனமார் மராமரம் வன்னியை எய்யும் வண்ணமதாய்
கனமார் வில்லில் கணையிடு தன்மைக் கையினராய்
இனமார் தேவர் இனிதமர் கோலத் தினிதேகும்
தனமார் கோவைத் தசமித் திருநாள் இதுதிண்ணம்.

27. கார்த்திகைத் திருநாள்.

1. ஒளிதரு விளக்கை உயர்திரு மாடம் மாளிகையில்
மிளிர்தரும் உடலில் மின் மினி நகைகள் மீதசைய
இனிதரு பச்சைக் கிண்கிணிக் காலர் ஏற்றிடுவார்
களி தரு கோவைக் கார்த்திகை நன்னாள் கண்டறிவீர்

2. எங்குந் தெருவில் எளியவர் வீடும் எழிலுடைத்தாய்
குங்கும மிட்டு கோலமு மெழுகிக் குறைவிலதாய்ப்
பொங்குறு தீபம் புண்ணிய நாளாய்ப் பொலிந்திடலால்
கங்குலிற் கோவைக் கார்த்திகை நன்னாள் காண்பீரால்.

3. கொடிபட ஆடும் கோபுர வாயில் கோயிலெலாம்
வெடிபடும் தூபம் விளங்கிடு சுடரின் விளக்கீடே
அடிபடநிற்க அளவிலாச் சோதி அலங்கரிக்கக்
கடி படும் கோவைக் கார்த்திகை நன்னாள் கண்டறிவீர்.

4. நதிதரு மலைகள் நாணினை ஏற்கும் நாகம்போல்
பதிதனைச் சுற்றிப் படர்ந்திட ஆங்குப் பரன் கோயில்
துதிதரு மக்கள் தூய்நறுந் தீபம் தோன்றியிடக்
கதிதரு கோவைக் கார்த்திகை நன்னாள் காண்பீரால்.

5. திரிதரும் தெருவில் திரிவிடும் தீபம் திகழ்ந்திலங்கத்
தெருதரும் அமைதி தேவர்கள் உலகத்திகைத்திடுமால்
உருவுறும் சுடர்கள் உண்மையிற் செய்யும் உயர்வெல்லாம்
கருதரும் கோவைக் கார்த்திகை நன்னாள் கண்டறிவீர்.

28. பேரூர் திருவாதிரைக் காக்ஷி.

1. மணியார் விதானம் வாயிற் புறத்தே மலிந்திருக்கும்.
துணியார் கொடிகள் தோரண இலைகள் தொக்கிலங்கும்
பணியார் கோபுரம் பாங்கரி லெல்லாம் பகரரிதாய்
அணியார் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

2. இருள் சேர் வைகறை யாமந்தனிலே இயங்கியுறும்
தெருள் சேர் சிற்பம் தேர்ந்திடு கனகச் சிற்சபையில்
பொருள் சேர் அமுதப் புனிதா பிடேகம் போற்றியிடும்
அருள் சேர் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

3. ஒழியா அழகை ஒளிதருமேனி உடன் கொள்ள
மொழியா விலையுறு முத்து விரத்தினம் முகந்தூட்ட
பொழியா நிற்கும் பொலிவினை அருளும் புனிதனுமே
அழியாப் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

4. ஒளிசேர் சப்பரம் உற்றவராகி உயிர் பெம்மான்
களிசேர் ஆடல் கனிந்துறு நிலையில் கால் வைத்து
தெளிசேர் இதயம் திகைத்திட் டுருகத் திசை வருவார்
அளிசேர் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

5. நிறஞ்சேர் மலர்கள் நிமலனைத் தழுவும் நிலையிலுமே
திறஞ்சேர் தோளுடைத் திருவார் அன்பர் தூக்கியிட
குறஞ் சேர் கூத்தெனக் குலவிடும் நிலையிற் கொண்டிடுவார்
அறஞ்சேர் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

6. கழகார் செந்தமிழ் கற்றோர் மண்ணுடன் கவிபுகல
பழகார் மக்களும் பண்ணினைக் கேட்டுப் பயனடைய
புழகார் மேனி பொலிவுடன் தோன்றப் புறப்படுவார்
அழகார் பேரூர் ஆதிரை நாளை அடை மின்கள்.

7. திங்கள் ஞாயிறு திகைப்புறு வண்ணத் திருவுருவில்
எங்கள் மலமும் இறந்திடுவண்ணம் எழிலரசுத்
துங்க மாத்தினைத் துதிப்போர் போற்றச் சுற்றிடுவார்
அங்கண் பேரூர் ஆதிரை நாளை அடைந்துய் மின்.

8. வீதிப் புறத்தில் வெளியூர் மக்கள் வியப்புடனே
சோதித் திகழும் சொலிப்பதை நோக்கி சோர்விலராய்த்
தீதில் துதிகள் திருவாயாரத் தோத்தரிப்பார்
ஆதிப் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

9. முரசார் ஒலியுடன் முரளியினிசையும் முயங்கிடவே
சரசார் மாதர் சதிரினை ஆடச் சனத்திரளும்
சிரசார் அசைவைச் சிறப்புடன் கொள்ளும் சேர்க்கையதாய்
அரசார் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

10. துணையார் நமக்கே தூய்மை வள்ளல் துணையன்றி ?
இணையார் இன் கழல் ஈசன் அருளினை ஏற்றிடுவோம்
திணையார் மருதத் திசை சேர் நொய்யல் தீரத்தே
அணையார் பேரூர் ஆதிரை நாளை அடைமின்கள்.

(கு—பு.) நொய்யல் நதி—காஞ்சிமா நதி என்பது.

29. புதிய ஆண்டு.

புதிய ஆண்டு புத்துயிர் தருக
முதியர் இளையர் முன்னுறச் செல்க,
சென்ற ஆண்டு செறிந்த துன்பம்
வென்ற மாட்சி வீறுடன் நிற்க.
இனியுறும் செயற்கும் இன்னல் நீங்க
கனியுறச் செல்க கழியென நின்று,
நாட்டினர் அடைந்த நலி வெலாம் போக,
வாட்டின மறவியல் வாரா தொழிக,
குடிகள் உழுநிலம் கூடித் தருக,
மிடியிலா வாணிபம் மீளப் பெருகுக.
பிரசோற் பத்தி பீடுடை ஆண்டு
கரஞ் சேர்த் தாடக் களிப்புடன் வருக.
முதல் நாள் இன்றே முயங்குதும் கேண்மோ.
இதநாள் எனவே இக் கோ வையிலே.
புதுயுகங் குறியாய்ப் போந்துறு விமானம்
குதுகல மாகக் குலாவிய தென்னே!
இதுவே குறியாய் இனியும் உயர்க
எதுவும் மேன் மேல் எழுக எழுகவே!
பொருளும் உயிரும் பொலிவுடன் மல்குக.
அருளும் குணமும் அளவிலா துயர்க!

(குறிப்பு.) இன்று முதன் முதலாக கோவைக்கு ஒரு ஆகாய விமானம் வந்து மக்களை ஏற்றிக்கொண்டு சென்று வருகிறது. ஆயிரக்கணக்கான பேர் இவ்வதிசயத்தைக் காண ஏகுகின்றனர் இதன் குறிப்பு மேலே காண்க.

30. ஆகாயவிமானத்தில் முதல் அனுபவம்.

1. ஒருபுதுமை நமதுநகர் உறுவதுநீர் காணீரே
இரும்புவியில் இதனைநிகர் இயந்திரமும் கண்டீரோ,
பெரும்பருந்தோ வான்கழுகோ பேர் மயங்கிக் காண்பீரால்
தெருப்புகுந்து வியந்திடவே திசை நோக்கி வாரீரே

2. மக்களெலாம் தெருவடைந்து வானமதை அண்ணாந்தே
திக்குளெலாம் திரும்பியுமே திகைப் புறுதல் காண்பீரால்
பக்கலெலலாம் செல்வருடன் பாமரரும் வானோக்க
கக்குளெலாம் தாயருடன் கைம்மகவும் வரக்காண்பீர்

3. முதி யோர்கள் "தெரிவிலே முன்னின்று காட்டெ"னவும்
சதி யோர்ந்து பேத்தியர்கள் சார்ந்ததுமே ஒரு பருந்தை
மதி பேய்த்து "வாயுரதம் மாட்சியுடன் காண்" எனவே
குதி யோங்கிச் சிரித்திடவும் கூர்ந்தங்கு காண்பீரால்

4. பள்ளியதில் பயின்றுவரும் பையன்மார் மிகவியந்து
விள்ளியிடும் கதையினுக்கோ வியனுலகில் அளவில்லை
கிள்ளியிட்டுக் காகிதத்தே கிழியிரதம் ஒன்றமைத்தே
தள்ளியிட்டு வானமதில் தாம்மகிழ்வர் மேலெறிந்தே.

5. அகத்தினிலே பெண்டிர்கள் அடுப்பூதும் அமயத்தே
சகத்தினிலே செவிநுழையாச் சலனமுமே செவிபுகவும்
முகத்தினிலே வியப்பிலங்க முற்றத்தே வெளி வந்து
இகத்தினிலே மாயந்தான் இதுவென்னே எனவியப்பர்.

6. "வாயுரதம் எவ்விடத்தே வந்துளதாம்" என வினவி
போயுயரக் கிளம்புவதும் புகுந்தகத்தே திரும்புவதும்
வாயுறக்கப் பேச்சினிலே வகைவகையாய் வகுத்திட்டே
தாயுறவும் தன்னுறவும் தந்தையரோ டழைத்தேகும்.

7. செருப்படிப் பேர்ப்பள்ளமதன் சிறிதயலில் வாய்ந்துளதாம்
விருப்பமைந்த வாழையினம் வீறடக்கும் தென்னையினத்
தொருப்படிகள் சுற்றிவர உழுதிருக்கும் வெளியிடமொன்
றிருப்பஅது வாயுரதம் இலங்கியுறும் மேன்மைத்தே.

8. கணக்கிலதாய் நகர்க்குடிகள் கண்டதனை மெச்சிடவே.
பிணக்கிலதாய்க் கைக்காசு பிரித்தெடுத்து நல்கியுமே
வணக்கிலதாய் உயரப்போம் வாகனத்தை நோக்கியுடன்
இணக்கிலதே தம் அகமும் இயங்குவரால் ஒரு சாரார்.

9. ஆயினுமே பப்பத்து அரும் பொன்னை அதற்கீந்து
தாயினுமே மிகமதிக்கும் தன்னுயிரைக் கைப்பிடித்து
வாயினுமே யாதொன்றும் வழங்கவிய லாவகையில்
போயினிதே திரும்புவரால் புதுமயக்கம் தீராமுன்.

10. யானுந்தான் விசும்புலவும் ஆசையினால் இரதமூர்ந்தேன்
வானுந்தான் பூவமளி வகைத்து அச்சம் சிறிதின்றி
தேனுந்தான் தித்திக்கும் திருக் காட்சி கண்தனக்கு
ஈனுந்தான் எனில் இனியும் எகுவமே என ஊட்டும்.

11. எம் ஊரும் இத்துணையாம் எழில்உடைத்தோ எனவியந்தேன்
எம் ஊரின் செய்களுமே இயல் கணிதத் தியல்புடைத்தே
எம் ஊரின் தெருக்களிடை இடவமைப்பும் சால்பினிதே!
எம் ஊரின் சுற்றமைப்பும் எழில்காட்சி கொண்டுளதால்!

12. மேனின்று கண்டுவந்த மெய்யின்பம் ஒருகணத்தே
வானின்று கீழ்ப் பாய்ந்து வாயுரதம் மண்ணடையத்
தேனின்று நாவடையும் தித்திப்பு மாய்வதுபோல்
யானின்று கண்டவின்பும் எவ்விடமோ மறைந்ததுவே.

(கு—பு.) ஆகாய விமானம் கோவைக்கு வந்தபோது அதில் ஏறிச் சென்றபோது அடைந்த உணர்ச்சியைக் கூறுவது.

செ. 7. செருப்படிப் பள்ளம் என்பது கோவையில் கீழ்ப்பால் ஒரு பள்ளம்.

31. நாட்டுப் பற்று அல்லது தாய் நாடு.

அன்னிய நாடுகள் அலைந்து சலித்து
தன்னுடை நாட்டில் தாளை வைக்கையில்
இதயம் பொங்கிக் கொழுந்துவிட் டெரிய
"இதுவென் நாடு ஈதென் தாய்நா"
டெனவே தன்னுள் இயம்பா திருக்கும்
மனிதனும் உணர்விலன் மாநிலத் துளனோ?
அத்திறத் தவனும் அகப்படில் குறிப்பையே,
எத்திறக் கவியும் இமிஅவற் புகழான்;
பேரும் பட்டமும் பெரிதாய் பெற்றும்
ஆரும் அளவிலாப் பொருளும் படைத்தும்
பெயரும் பட்டமும் பிறிதும் பயன்தாா,
சுயநலந் தன்னிலே ஏற்றிடும் நீசன்
உயிருடன் உளநாள் இன்னிசை இகழ்ந்தே
இயற்பிணம் போல இழந்தே அலைவான்
இறப்பான் இரண்டாம் இறப்பும் இறக்கையில்
துறப்பான் மண்ணில் தூசியோ டொன்றாய்
அழுவா றின்றி அணைவார் இன்றிப்
புழுதியை அடைவான் புகழ்வார் இன்றியே.

(கு—பு.) சர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கிலக்கவி எழுதியதன் மொழி பெயர்ப்பு ("Breathes than the man with soul so dead")

32. கல்வி.

1. வள்ளுவர் முதலாய் வகைவகை அறிவோர்
விள்ளுவர் கல்வியை விலையிலாப் பொருளாய்;
தள்ளின தவர்மொழி தமிழ்நா டன்றோ,
கொள்ளுவ துண்டேல் குறைவும் படுமோ.

2. இருபது நூற்றாண் டியன்ற அளவு
பெருமுது புலவர் பெரிதுவந் திருத்தியும்
ஒருபது பெயரும் ஒருநூற் றவரில்
அருமுறை கல்வி அடைந்திலர் இக்கால்.

3. தமிழர் பெருமை தலைசிறந் தவந்நாள்
இமியும் கல்வியின் இயல்பறிந் திடாப்பிறர்
புவியில் படிப்பும் புகழும் பெற்றுக்
கவிஞர் ஆகில் காண்பது வியப்போ.

4. ஏனைய நாட்டினர் இழிநிலை கொண்டநாள்
வானை நிகர்த்து வண்மதிப் புற்றயாம்
ஊனை வளர்க்கும் உயிரினும் வேறாய்
மேனலம் விரும்பவும் மேவினோம் இல்லை.

5. மக்கள் என்னும் மதிப்பினைப் பெறவே
தக்க கல்வியைத் தமிழர் எல்லீர்,
ஒக்க அடையும் உயர்நோக் குற்றே
பக்கல் எல்லாம் பள்ளியை வைப்பீர்.

6. சிறுவர் மட்டும் சிறந்திடில் போதா,
வறுமை முதல்தடை வருதலும் கூடா,
நெறியறிந் தெவரினும் நிறைந்திடும் கல்வியின்
குறியை நாடிடும் கொள்கையும் வேண்டும்.

33. தொழில்,

1. தொழிலே உயிரின் தோற்றம தாகும்
அழிவே அடையும் அசைவற் றிடிலே
வழிவே றிலையால் வளரும் உயிர்கள்
எழிலே பெறவும் இயங்கவும் வேண்டும்.

2. தொழிலும் யாதாம் தோற்றத் தெனினும்
இழிவும் சிறிதும் இலையால் என்றும்
பழியும் நாணும் பக்கமும் அணுகா
வழுவும் பொய்யும் வாரா தெனிலே.

3. எந்தச் செய்கை எக்கால் செயினும்
தந்தம் உள்ளம் தகைவாய்ச் செலுத்தி
முந்தி அறிந்த முறையில் ஆய்ந்தே
உந்தும் அன்போ டுண்மையிற் செய்வீர்.

4. பணியைச் செய்கையில் பணியே கருத்தாம்
அணியைப் பூண அகத்தே கொள்வீர்
மணியே எனினும் மன்னும் பலனை
தணிவாய்க் கூடத் தரித்தல் வேண்டாம்.

5. தொழிலில் மெய்ம்மை தூய்மை தருமே
அழிவில் செல்வம் அளிக்கும் வீடும்
விழைதல் வேண்டின் வேறாய்த் துதியில்
நுழைதல் வேண்டாம் நோன்பும் இதுவால்.

---

* கு—பு. (36-பக்கம் செ. 6.) கவிஞன்—இரவீந்திரநாத் டாகூர்

6. தெருவில் கல்லைத் தெரிக்கும் அவனிடம்
எருவில் மண்ணில் இயங்கும் அவனிடம்
ஒருதனி* முதல்வன் உள்ளன் என்றே
* ஒருமுதல் கவிஞன் உரைத்ததும் கேளீர்.

7. தொழிலின் மேன்மை தொலையா திருப்பினும்
அழிவில் வாய்மை அகத்தே கொண்டது
பழியில் தூய்மை பண்டைய தாதலின்
விழியைப் போன்றே விழைவீர் தொழிலை.

34. முயற்சி.

1. முயல்க! முயல்க! முற்றும் முயல்க!
முயல்க! முயல்க! மேன்மேல் முயல்க!
புயல்கள் வரினும் பூமி நடுங்கினும்
முயல்க! முயல்க! முடிவுற முயல்!

2. ஆய்ந்து செயலை ஆழ்ந்து செய்க!
பாய்ந்து செய்தல் பாழா கும்மே,
ஓய்ந்து கிடத்தல் உணர்வுக் கழிவே
மாய்ந்து போகேல் மற்றும் முயல்க!

3. மேனாள் மன்னர் மேன்மேல் முயன்று
ஊனுர் தோல்வி ஒன்றுமே பாரா
தானுர் முன்னணி ஆளர் ஆகிப்
போனுர் வாகை புனைந்தார் அன்றே.

(கு—பு.) செ. 3. மன்னர்—ராபர்ட் புரூஸ் என்பான் ஸ்காட் தேசத்து அரசன்

4. பேசக் கூசும் பிதற்றுவா யொருவன்
மோசக் கருத்தின் மொழிவலார் அவையில்
ஏசப் பெற்றதில் எரிந்தே முயன்று
வாசப் புகழ்நா வல்லோன் ஆனான்.

5. இவர் போல் பலரும் இயன்றே முயன்று
தவர் போல் சீர்த்தி தவறா துற்றார்
யுவரீர் எல்லீர் யூகிக ளாகிப்
புவனத்துய்மின் புதிதாய் முயன்றே.

35. மலையும் அணிலும்.

1. மலையும் அணிலும் மலைந்தே நிற்க
மலையும் அணிலை மாற்றம் விளிக்கும்
"தலையும் திரியத் தருமோர் துரும்பே"
குலையும் அதற்கே கூறும் அணிலும்.

2. "ஐயம் இலையே நீயே பெரியை
வையம் ஆக வறுமை ஆக்கம்
பையச் சேரும், பாரில் ஆண்டு
உய்யச் சூடும் வேண்டும் குளிரும்."

3. "எந்தன் இடத்தே யானும் அமர
முந்தும் வெட்கம் முற்றும் இலையால்,
உந்தன் அகண்ட உருவம் இலையேல்
எந்தன் சிற்றுரு உனக்கும் இலையே"

செ. 4. க்ரீசு தேசத்து டிமாஸ் தினிசு என்பான்
(கு—பு.) ஆங்கிலத்தில் எமர்சன் எழுதிய "The Mountain and the squirrel" என்றதன் மொழி பெயர்ப்பு.

4. "ஊக்கம் எனிலோ உந்தன் இடத்தே
நோக்க அரிதே, நுனிதான் உண்டோ,
போக்கும் வழியாய் அணிலும் கொள்ள
வாய்க்கும் உந்தன் வளர்சார் பினிலே."

5. "அச்சீர் மறுக்க யான் வரவில்லை,
எச்சீர் எடுப்பின் மாறித் தோன்றும்
எச்சீர் சிறப்பும் எழிலாய் அமைத்து
வைச்சுள் ளதுவால் வால்அறி வன்றால்."

6. "கானல் கலையே கடிதே சுமக்க
ஈன முதுகுக் கியலா தாமால்,
போன பெருமை போக, கொட்டை
தானே நெறுக்க சற்றும் வலையோ.?"

36. பெருங்கடலும் சிற்றூறலும்.

1. அஞ்சும் கடலுள் அருகோர் பாறையில்
துஞ்சும் ஊறல் துளிதுளி ஒழுக,
வஞ்சி தன்னை வதைத்திடும் கடலும்
கொஞ்சும் ஊறலைக் கூவிக் கூறும்.

2. "எனக்குத் தானே எதுவோ செயவே
நினக்குத் தோன்ற நீதான் விழைவாய்?
சினக்கும் புயலும் சீறும் உருமும்
எனக்கே உள்ளது ஏனோ அறிகிலை?"

(கு—பு.) "விக்டர் ஹ்யூகோ" என்ற பிராஞ்சிய கவி எழுதியதன் சார்பு.

3\. "வானின் தொடக்கம் யானும் தொடுவன்
யானும் பரந்த அகற்சியை உடைவன்
ஈனன் நீயும் என்றனை அடைய
யானும் பெறுபலன் யாதோ கூறாய்."

4\. அருவியும் கடுங்கடற் கரையும் இதையே,
"பெருமையும் ஓசையும் பெறவிலா நினைவில்
பெருமைக்கடல், நீ பெற்றடை கில்லா
ஒருதுளிக் குடிநீர் உனக்குத் தருவனே!"

37. இடு குழியும் புது மலரும்.

1\. இடுகுழி மலர்ச்செடி யினையே விளிக்கும்
"விழியல் உன்மேல் விரித்துத் தெளிக்கும்
கடிகமழ் கண்ணீர் களைதான் அன்பே
தொடுமலர் நீதான் தொடுத்தனிம் என்றே?"

2\. கடிமலர் குழிக்கே கனிவாய் மலரும்,
"படுவாய் என்றுமே படிந்திடும் உன்றன்
மடுவாய் தன்னுள் மறைந்திடும் மக்களை
எடுவாய் நீதான் என்னே செய்வாய்?"

3\. மீண்டும் நன்மலர் முருவலித் தியம்பும்
"மாண்டோர் குடியே, மற்றும் என்னைத்
தீண்டும் துளிகளைத் தேறைப் பரிமளப்
பூண்டாய் ஆக்கிப் பூப்பன் யானே."

(கு—பு.) பிராஞ்சு மொழியில் "விக்டர் ஹ்யூகோ" எழுதியதன் சார்பு.

71980

4. அதற்குக் குழியும் அளிக்கும் பதிலே,
"குதிக்கும் ஒவ்வொரு குற்றுயிர் தனையும்
மதிக்கும் விண்ணின் வாசியே யாகும்
கதிக்கே விடுவன் கசிந்திடும் பூவே."

38. படிப்பும் அறிவும்.

(ஓர் கதை.)

1. வேதியன் தனை ஒரு வேந்தனும் விளித்துமே,
சோதிட நூலெம் சுதனுமே அறிந்திடப்
போதனை செய்யவும் போதுவாய்" என்றலும்,
ஓதிட அவனுமே உவப்புறக் கற்றனன்.

2. முழுவதும் ஓதியே முடிந்ததும், உடனுடன்
வழுவிலாக் குரவனும் வந்துமே கூறினன்,
விழுமிய மன்னனும் வினவியே தன்சுதன்
தழுவிய படிப்பும் தக்கதோ எனச்சொலி,

3. கரத்திடை மோதிரம் கறந்துமே சுதன்றனை
"உரைத்திடு இதனிடை உளதுதான் எது" என,
சிரத்தையாய்க் கணித்துமே தீவிரம் சொல்லுவான்,
"உருண்டையாம் பொருளது, உளதில் ஓர்துளை."

4. "மற்றுமே அதனிடை மலிந்ததோர் கல்லுமே"
உற்றதைச் சொன்னதும், உளமதில் மகிழ்ச்சியும்
பெற்றவவ் வேந்தனும் "பிறிததன் பெயரினைக்
கற்றுரை" எனச் சொலக் காதலன் கூறுவான்.

5. "ஏந்திர மேன்முடி என்பனே அதை" என
வேந்தனின் செவிபுக, வேதனை உற்றனன்.
கூர்ந்துமே மன்னனும் குரவனை நோக்கிட
தேர்ந்துமே மொழிந்தனன் திறனுடை வேதியன்.

6. "சோதிட நூலினில் சொற்பமும் பிழையிலை,
போதனை பெற்றிடும் புதல்வனின் மூளைதன்
பேதமே அலால்அது பிறிதிலை உணர்" என
வேதியன் மொழிந்திட வெட்கினன் வேந்தனும்.

39. யூகம்.

(ஓர் கதை.)

பண்டொரு நாளிற் பைம்பொழி லடவியில்
தண்டுடன் சென்ற ஓர் தடக்கைவன் மன்னன்
வேட்டை யாடிய வீறுடன் செல்கையில்
நாட்டம் பட்டும் நழுவிப் போந்த
கடமான் ஒன்றைக் கருதிச் சென்றனன்.
விடமாட்டா வகை விரைவிற் செல்லச்
சிறிய தோர் குடிலின் திண்ணையின் முன்னர்
அறிவினில் முதிர்ந்த ஓர் அந்தகப் பெரியோர்
அமைதியில் இருக்கவும் அருகினிற் சென்று
கமையுடை மன்னன் கருதியே வினவினன்,
"தவமதில் சிறந்த தவமதிப் பெரியோய்!

(கு—பு.) பாரசீக மொழியில் வழங்கிவரும் ஒரு கதையை ஒட்டி எழுதியது.

இவண் ஒரு கடமான் இயங்கின துண்டோ?"
என்னவும் அரசன் இயம்பிய துணர்ந்து
"மன்ன ரேறே, மானென் றிவ்வழி
சற்று முன்னர் சடுதியிற் சென்றது;
உற்று நோக்கிட உறுதியாய் அடைவீர்"
என்னவும் பெரியார் இயம்பிட அரசன்
முன்னம் வியப்புடன் முடுகியே சென்றனன்.
சிறிது கழித்துச் சிறப்புடன் அமைச்சன்
வறிய குடலில் வயது முதிர்ந்த
பெரியரைக் கண்டு பேணி வினவினன்
"பரிவுடன் சொல்வீர், பரதே சியாரே!
இவ்வழி யேதும் இயங்கின துண்டோ?"
அவ்வினக் கேட்ட அவருரை தருவார்:
"அமைச்சரே, மானென் றிவ்வழி யேகியது;
இமைப்பொழு தளவில் இறைவனும் சென்றான்
நீரும் சென்றிடின் நிமிடம் காண்பீர்"
ஆரும் மொழிகேட் டமைச்சனு மேகினன்.
பின்னர் ஒருசிறு பேதைச் சேவகன்
முன்னர்ச் சென்று முதியரைக் கண்டு,
"குருடா, ஒருவிடை கூறுவை யாரோ
புருடரும் இவ்வழி போந்தது முண்டோ?"
எனவே வினவ இயம்பினர் பெரியார்—
"முனமே ஒருமான் முன்செலப் பின்னர்
அரைசரும் அவர்பின் அமைச்சரும் ஏகினர்;
விரைசாய்ச் சேவக, விரைந்திடில் நீயும்
அண்டையிற் றனே அவர்களைச் சேர்வாய்"
விண்டதும் சேவகன் விரைந்தே சேர்ந்தனன்.

மூவரும் ஓரிடம் முயங்கி யதறிந்து
"யாவரும் இவ்விதம் எவ்வணம் கூடினம்"
எனவுரை ஆய்வான் இயங்கிய உண்மை
தனைதன செய்தி சாற்றியே விடுத்தனர்.
இறுதியிற் "பெரியரை இணங்கிக் கேட்டு
உறுதியை அறிகுவம் உண்மையை" என்றார்.
பெரியரைக் கண்டு பெரிதும் விழைந்து
அரியதோர் நுண்மையை அறிந்திட விரும்பி,
மன்னன் ஏகி மாதவற் பணிந்து
"பொன்னடி போற்றி, பொலிவுடன் அருள்வீர்
நீரோ அந்தகர், நேரில் காண்கிலீர்,
யாரோ அன்னியர் அருகிடில் அவர்தம்
குணமும் பண்பும் கூறிய தெவ்வணம்?
பணமும் பேருமிப் பண்பினைத் தாரா."
எனவே இறைஞ்ச எழின்மதி வல்லோர்
இனிதே இயம்புவர் இறைவனை நோக்கி—
"மன்ன, கேண்மோ! மானும் இவ்வழி
முன்னர் சென்ற முறையை அதனடி
ஒலியா லறிந்தனன் ஓடுந் தன்மையில்;
பொலியா நின்று புறகே சென்ற
நீவிர் மூவரின் நிலையும் வாக்கில்
மேவிய சொல்லால் அறிந்தனன்" என்றார்.
அடிகளின் மொழிதனில் அருமையை வியந்து
முடிதனை வணங்கி மூவரும் சென்றனர்.
அனுபவத் தாற்றலும் அரும் மொழிப் போக்கும்
எனுமவை உறுதிறம் எத்துணைப் பெரிதே.!

40. வணிகனும் மீகாமனும்.

வணிகன்—உன்தன் ஐயன் உன்தன் பாட்டன்
உயிர்தனை துறந்ததும் எவ்விடம் தானே?

மீகாமன்—என்தன் முன்னோர் எழிலுயிர் துறந்ததும்
அந்தமில் அலையுடை ஆழியின் மீதே.

வணி—ஆழி மீதே அன்னார் இறந்திடின்
ஆழி மீது நீ அமர்தலும் என்னே!

மீகா—ஆயின் இதனை அருளிச் சொல்வாய்
போயின உந்தையர் போந்ததும் எங்கே?

வணி—அன்னார் துயின்ற அழகுமஞ் சத்தில்

மீகா—ஆயின் நீ அம்மஞ்சத் தமர்தலும் என்னே?

41. ஹாதிம் தாயி சரிதம்.

1. அரபியர் நாட்டில் ஓர்பால்
ஆண்டனன் ஹாதிம் மன்னன்.
மரபினில் அரபி யேனும்
மகிமையோ பிறநா டேற்கும்.
பிரபினர் நாளும் வண்ணம்
பிறர்துயர் போக்கும்ஆற்றில்
சுரபியும் தோற்கச் செய்யும்
சொல்லையும் உலகம் போற்றும்.

(கு—பு.) இக்கதை "நான்கு துறவிகள்" என்னும் ஒரு அராபிய நூலில் உள்ளது. இது அதன் சார்பு.

2. அன்னவன் ஆளும் நாளில்
அரபியர் நாட்டின் மன்னர்
மன்னராய் ஆண்ட நௌபல்
மன்னவன் ஹாதீம் கீர்த்தி
உன்னத மடையத் தன்பேர்
உலகினில் மறையும் தன்மை
இன்னதென் றறிய அன்னோன்
இதந்தனில் குற்றம் கண்டான்.

3. நல்லிசை ஒருவன் உற்றால்
நமையது உறுத்தும் அன்றே,
சொல்லிய பகையும் ஆங்கே
சொலிப்பதும் நௌபல் கண்டான்,
வில்லிடை நாணும் ஏற்றி
விரோதியைத் தொலைப்பான் எண்ணி
கொல்விடும் தானை சூழக்
கொடுவினை நௌபல் சென்றான்.

4. படையினின் வரவு கண்டு
பயந்தவன் அல்லன் ஏனும்
கடவுளின் அன்பு மிக்குக்
கருணையில் மலிந்த ஹாதீம்
படைவரும் சமரில் மக்கள்
புகுந்துயிர் விடுதல் எண்ணி
மடைவிடு கருணை மேலாய்
மலியமர் செய்தல் ஒவ்வான்.

5. தன்னுயிர் போலு மக்கள்
தனிச்சுக வாழ்வில் வாழ
உன்னிய மன்னர் தானும்
உயர்மலை ஒன்றின் பாங்கர்
மன்னிய குகையிற் புக்கு
மறைவினில் ஒளிந்து கொள்ள
துன்னிய நௌபல் தானும்
துணிவுடன் நாட்டைக் கொண்டான்.

6. நகரினிற் பொருள்கள் யாவும்
நாடியே கொண்ட தன்றி
பகரிடும் ஹாதீம் தாயைப்
பரிவுடன் கொணரு வோர்க்கு
நிகரிலாப் பரிசு பைம்பொன்
நிகழ்த்துவன் எனவே சாற்றிப்
புகலிடும் பறையைக் கொட்டப்
புல்லியர் தேடல் உற்றார்.

7. பொன்னெனும் பெரும்பேய் தூண்டப்
புகுந்தனர் வீடும் காடும்
மின்னெனும் முடுக்கும் மூலை
மிளிர்இடம் ஒதுக்கும் எல்லாம்
அன்னியர் வாழும் சாலை
அடுத்தவர் கூடும் சோலை
இன்னவும் பலவும் தேடி
இளைத்தனர் மன்னர்க் காணார்.

8. இவ்வணம் இருக்க ஓர்நாள்
இருமுது மக்கட் பெற்ருேர்
யவ்வணம் முதலே யாக
அடவியில் விறகு வெட்டும்
வெவ்விய தொழிலைப் பூண்டோர்
வீரனின் மறைவின் பாங்கர்
திவ்விய அருளே என்ன
திகழ் சுருள் பொருக்கல் உற்ருர்.

9. படுவெயில் தலையில் தாங்கப்
படுதுயர் பொறுக்க மாட்டா
வடுதலைக் கிழவி சொல்வாள்
"வாழ்வெலாம் துயரே பட்டோம்
விடுதலை இன்றே காண்போம்
விறலர சாதீம் நம்மில்
நடுவினில் கிடைக்கின் இந்நாள்
நற்றினமாகும்" என்ருள்.

10. இம்மொழி கேட்ட மூத்தோன்
இகழ்ந்துரை செப்ப லுற்ருன்
"வெம்மொழி பகரேல், நீ தான்
விதிதனை அறியாய் போலும்,
நம்முடைத் தலையே டுண்டு
நடுவன விறகை வெட்டி
எம்முடைத் தலையில் ஏற்றி
இயற்கடை விற்றல் தானே."

11. "ஒருதினம் தவறிப் போகில்
உணவொடு காசும் இல்லை,
திருதினம் எங்ஙன் ஆகும்,
திருவிலா எமக்குத் தானே,
கருதிடும் ஹாதீம் எங்கே,
கைக்குளே கிடைத்தல் ஆமோ,
திருதிரு எண்ணல் வேண்டாம்
திருத்தியோ டிருப்பாய்" என்றான்.

12. இவையெலாம் குகைக்குள் நின்று
இறையவன் ஹாதீம் கேட்டான்
கவை யெலாம் கொண்ட மாவில்
கனமகன் சிறந்தோன் எவ்வண்?
சுவை யெலாம் ஊட்டச் செய்து
சூழ்ந்திடும் மக்கள் துக்கக்
குவை யெலாம் நீக்கல் அன்றே
குடிமகன் கடமை தானே.

13. இவ்விரு முதியர் துக்கத்
திழிந்துளர், கண்டும் யானோ
தெவ்வரும் காண லில்லாத்
திகழ்குகை ஒளித்தல் கொண்டேன்,
ஒவ்வுமோ அன்பின் ஈட்டம்
உணர்வினுக் கிதுதான் ஆகா
திவ்வகை எண்ண மிட்டே
இறைமகன் வெளியே போந்தான்.

14. முதியனை விளித்து மன்னன்
முகமனும் கூறிச் சொல்வான்
" கதியிலாப் பெரியோய், யானே
ஹாதிமென் றுரைக்கும் மன்னன்
நிதியுடை நெளபல் பாலே
நீ எனைக் கொண்டு செல்லின்
விதியுறும் பைம்பொன் பெற்று
வீறடை வாயே" என்றான்.

15. கிழவனும் வியப்பு முற்றுக்
கெடிபொழு தாய்ந்து சொல்வான்
"எழுமிதில் நன்மை உண்டே
எனக்கெனில், உனக்கோ என்னும்?
தொழவுள தன்மைத் துன்னைத்
தெவ்வரில் விடுத்தல் நன்றோ
பிழைபல செயினும் இன்றிப்
பிழைதனைச் செய்யேன்" என்றான்.

16. " யான் பெறும் பைம்பொன் தானும்
எதுவரை நிலைக்கும் கூறாய்,
ஊன் பெறும் யாக்கை தானும்
உலகினில் இருத்தல் எக்கால்!
வான் பெறும் நாளில் என்னை
வானவன் கேட்கில் யானும்
தான் பெறும் விடையும் ஏது
தருவனே? என்று சொன்னான்.

17. மன்னவன் எவ்வா றாக்கி
மறுமொழி உரைத்தும் கேளான்;
அன்னவன் தன்னை நோக்கி
"அன்ப, என் னுரையைக் கேளாய்,
என்னையும் குகையில் நீயே
இதுவரை ஒளித்து வைத்தாய்
என்னவே அரசற் கூறில்
என்செயும் நீதான்" என்றான்.

18. முதியவன் இதனைக் கேட்டு
முகத்தினில் விமிதம் உற்று
"கதியினின் கொடுமை என்னே!
கருதிய நன்மைக் கிந்த
விதியுமோ, தீமை யாகும்
விளைச்சலு முண்டோ" என்றான்
இதுவெலாம் நிகழ்தற் குள்ளே
இகவலர் கூடிச் சேர்ந்தார்.

19. மன்னனைப் பிடிக்கும் ஆற்றில்
மதியினைச் செலுத்தும் புல்லர்
இன்னணம் தன்னந் தானே
இறையவன் கிடைத்த லோடும்
துன்னியே பிடித்துக் கொண்டு
துன்னெறி நௌபல் பாலில்
முன்னினர், மனமும் நொந்து
முதியனும் தொடர்ந்து சென்றான்.

20. மனமகிழ்ந் தரசன் நௌபல்
மருவிடும் மக்கள் நோக்கி
"கனமுடை இதனைச் செய்தார்
சடுதியில் வருவீர்" என்ன
தனமதில் ஆசை பூண்ட
தாமிலார் பலரும் வந்து
"முனமிதை யானே செய்து
முடித்தனன்" என்றார் அன்றே.

21. அவர்தமில் ஒருவன் வந்து
"ஆதிமின் உளவை ஆய்ந்தே
எவரினும் முதலில் கண்டேன்
என்கொடி முதலில் நாட்டும்
விவாமும் இதுவால், பொன்னை
விதித்திடும் எனக்கே" என்றான்
"தவறிடீர் யானே கண்டேன்
தயவிடும்" என்றான் மற்றோன்.

22. இவ்வழி பலரும் விள்ள
இருங்கிழ வோனும் ஓர்பால்
எவ்வழி தானும் கூற
இயல்பிலா நிலையில் நிற்க,
கவ்விய உதட்ட னுகிக்
கதியுடை நௌபல் நோக்கி
திவ்விய மொழியில் சொன்னான்
திருத்தகு குணத்தின் மேலோன்.

23. "உண்மையே இதுதான் ஆகும்
ஊன்றியே அறிவாய் மன்னா,
அண்மையில் நிற்கும் மூத்தோன்
அருமையில் கொணர்ந்தான் என்னை
ஒண்மைசேர் வாக்கொன் றுண்டேல்
விலங்கினில் சிறந்தோன் ஆக
திண்மைசேர் மனிதன் காட்டத்
தீங்கிலா திருத்தல் வேண்டும்.

24. "உன்னுரை பிறழா வண்ணம்
உண்மையை ஆய்ந்து நீதான்
என்னையே இங்கு விட்ட
இம்முதி யோனைக் கேட்டு
பொன்னையே தருதி" யென்றான்,
மொழிவதைக்கேட்ட மன்னன்
பின்னரில் நின்றோன் தன்னைப்
பெரிதுவந் துண்மை கேட்டான்.

25. களங்கமில் முதியோன் தானும்
கடைவரை முதலிற் கொண்டு
பளிங்கென முற்றும் கூறிப்
பகரரும் குணவான் தானே
உளங்குளிர் நிலையில் வந்தான்,
உண்மையான் கொணர்ந்தே னல்லேன்,
விளங்கிடும் இனிதான் என்ன
வெற்றிவேல் அரசன் ஆய்ந்து.

26. " இன்றுதான் அறிந்தேன் நல்லோன்
இசையொடு குணமும்" என்று
" குன்றுதான் இவர்முன் வெற்றி
கொள்ளுமோ வியந்தேன்" என்னு
" நன்று நன் றென்றன் முன்னர்
நாணமின் றியம்பும் உண்மை
கொன்றவர் தமக்கு மாறாய்
கொடுத்திடும் அடியே" என்றான்.

27. புன்மையர் அடிகள் தின்று
புன்றலை குழைத்தல் கொண்டார்,
நன்மையே கருதும் ஹாதீம்
நகரொடு பட்டம் பெற்றான்;
சொன்மையில் பிறழா மூத்தோன்
சொன்னதாம் பரிசும் தந்து
பன்மையில் தன்பேர் நிற்கும்
பான்மையும் பெற்றான் மௌபல்.

28. பிறர்துயர் சகிக்க கில்லாப்
பெருங்குணம் வாய்ந்த ஹாதீம்
அறந்தனிற் சிறந்தோன் என்ன
அலகிலாப் புகழைப் பெற்றான்,
விரலுடைத்தமிழர் நாட்டில்
விளங்கின குமண வள்ளல்
திறலினை ஒக்கும் என்றித்
திருக்கதை இயம்பலுற்றேன்.

42. அபூர்வ பலி.

1. பாஞ்சால நாட்டினிலே படர்ந்தவொரு சமயம்
பாமரனைச் சிங்கமதன் பார்ப்பெனவே செய்யும்,
தீஞ்சாரக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு
திரள் சமயம் இரண்டினையும் திருத்திடவே கொள்ளும்.

2. அமிருதமாம் சரசுதனில் ஆலயமே கொண்டு
அற்புதமாய்க் குருமூர்த்தி ஆனந்தம் விளைத்து
தமரினத்தே ஆவிதனைத் தத்தமிடும் வாஞ்சை
தங்கியுற உபதேசம் தேஜ்பகதூர் செய்வர்.

3. பொறையாளர் அன்பாளர் பொன்போலும் குணத்தர்
புனிதமுமாம் வினையாளர் பொறுப்பமைந்த சொல்லர்
குறையாமல் சற்சீடர் குவிந்தவுடன் அணைந்து
குவலயத்துப் பிறந்தபயன் கூட்டிடுவர் அவர்க்கே.

4. மகம்மதியப் பேரரசன் மதப்பற்று வாய்ந்தோன்
மாறிட்ட மதத்தினரை மனஞ்சலியா தறுப்போன்
அகமதனில் சாந்தமுமே அகன்றிடாக் குருவின்
அடக்க நிலை அகனிலமே ஆக்ரமிக்கக் கண்டான்.

(கு—பு.) சீக்கியர் சரித்திரத்தில் ஒன்பதாம் குரு தேஜ்பகதூர் எனும் பெரியார் சரித்திரப் பகுதி இதற்கு ஆதாரம்.

செ. 1. இருசமயம்—இந்து, முஸ்லிம்.
இரண்டையும் திருத்தினது சீக்கியமதம்.

2. அமிருத சாசு—நகரம்.

4. அரசன்—ஔரங்கசீபு.

5. செங்காளை முன்னரொடு செஞ்சீலை எனவே
சீறிட்ட அரசன் முன் சீடருமே நின்றார்
பங்காளர் உடன் பிறப்பும் படுகொலையே புரிந்து
பார்மன்னன் சாந்தமதில் படுகுற்றம் கண்டான்.

6. பொறைச்சமய இயக்கமதைப் பொன்றுவிக்க எண்ணிப்
பொற்குணத்துச் சற்குருவைப் போரிட்டே இழுத்து
கறைக்குற்றம் இல்லாதும் கண்டமதை நறுக்கிக்
கண்டவர்கள் அஞ்சிடவும் கடுங்குருதி வீழ்த்தி.

7. தெல்லியிலே நாற்சந்தித் தெருவிடையே வீழ்த்தி
திக்கில்லாப் பிணமெனவே திடுக்கிடவே செய்தான்
சொல்லையிலே குருவினுடைச் சுதனான சிறுவன்
சொலித்துவரும் இருதயத்தே சுடச்சுடவே பாய.

8. கோவுந்த சிங்கென்ற கோமகனும் சிங்கம்
கொண்டதொரு பதின்மூன்று கொல்லைத்து வீரன்
பாவியந்த அரசனுமே படர்ந்த வினை கேட்டு
பரிதவித்து தந்தையுடல் பறித்திடுவான் எண்ணி.

9. தனித்தேகி வழிநடக்கத் தடத்திலிரு மக்கள்
தகப்பனுடன் மகனுமாகிச் சகடோட்டிச் செல்ல
அனித்தேகிப் பேசிடவும் அருள் குருவின் சீடர்
அன்னவரும் எனக்கண்டு அரியபணி இயம்ப.

---

5. Red rag before the bull.

7. தெல்லி—டெல்லி நகரம்.

சிறுவன் கோவிந்த சிங்கு—10-ம் குரு.

10. சிக்கியர்அவ் இருவருமே சேவைசெய்வான் மிகுந்து
சிறு குருவின் துணையாகத் தெல்லிநகர் அடைந்து
நோக்கியவர் உருமறைத்து நுழைந்திருந்தார் பகலில்
நுண்ணிரவில் துணிவுடனே நாற்சந்தி அடைந்தார்.

11. சவத்திலெழு நாற்றமதைச் சகிக்க வொண்ணுதாலோ
சற்குருவின் துற்கொலையைச் சார்பீதி யாலோ
சவத்தினிடம் காவலர்கள் சார்ந்திலராய்க் கண்டு
சற்சீடர் அதனருகு சார்ந்தடைந்தார் மெதுவாய்.

12. குருவினரும் உடல்தனையே கொண்டேக எண்ணக்
குறுக்கிட்ட தோர்சிந்தை, கொடுமையுள்ள அரசன்
குருவினுடல் மறைத்தசெய்தி கொணர்ந்தவுடன் படையைக்
கொண்டனுப்பின் பணியெல்லாம் கூடகிலாது என்றே.

13. இவ்விதமாய்த் தயங்கிடவே எண்ணமிடும் காலே
இருவரினும் மூத்தவனும் இருங்கிழவன் சொல்வான்
செவ்வியதாம் குருவினுடல் சென்றவுடன் பதிலாய்ச்
சேர்த்திடவே தன்னுடலைச் செய்வனெனச் சொன்னன்.

14. அம்மாற்றம் கேட்டமகன் அப்பணிக்குத்தானே
அருகனென முன்வந்தே அளிக்க நின்றுன் உடலை
சும்மாதான் வெறும் வார்த்தை சொல்லல் மனம் இசையாச்
சொல் வீரன் கிழபுருடன் சூரிதனை எடுத்தே.

15. தன்மார்பின் மீதெய்து "சயசயவென் குருவும்
சய அடிகள் வாழ்க" என சத்தமிட்டு வீழ்ந்தான்,
கன் மார்பும் கரைக்கவல்ல காரியத்தை நோக்கி
கண்களிலே நீர்ததும்ப காளைகளும் வியந்தார்.

16. சட்டென்றே உடல்மாற்றி சற்குருவின் உடலை
சாலைவழி எடுத்தேகிச் சுராசுதனை அடைந்தே
குட்டொன்றும் வெளியாகா முன்னமுமே கூடிக்
குருவுடலை நல்லடக்கம் கொண்டார்கள் அங்கே.

17. அற்புதமாம் சேவைதனின் அருங்கடமை கேட்டு
ஆன்றோரும் தெவ்வருமே அகமகிழ மெச்சி
நற்குணமும் தியாகமுமே நனிகொண்ட முதியோன்
நல்வழியை உலகத்தோர் நாடிடவும் வியந்தார்.

---

16. சாசு—அமிருத சாசு.

71980

செய்யுள் முதற்குறிப்பு அகராதி.

அ

	பக்கம்.
அடுக்கி	4
அம்மா	19
அப்பா	19
அதமம்	24
அன்புறும்	22
அலைகள்	26
அமிழ்தம்	27
அகத்தினிலே	31
அன்னிய	33
அச்சீர்	38
அஞ்சும்	38
அருவியம்	39
அதற்குக்	39
அரபியர்	44
அன்னவன்	45
அவர்தமிழ்	51

ஆ

ஆடியபி	22
ஆயினுமே	32
ஆய்ந்து	36

இ

				பக்கம்.
இருமுயிர்	...	...	...	1
இயற்கை	...	...	...	8
இனித்தல்	...	...	...	15
இன்ன	...	...	...	18
இருள்	...	...	...	24
இருபது	...	...	...	34
இவர்	...	...	...	37
இடுகுழி	...	...	...	39
இவ்வளம்	...	...	...	47
இம்மொழி	...	...	...	47
இவையெலா	...	...	...	48
இவ்விரு	...	...	...	48
இவ்வழி	...	...	...	51
இன்றுதான்	...	...	...	53

உ

உருவுடக்	...	...	...	1
உயிர்நிலே	...	...	...	2
உதித்திடும்	...	...	...	2
உலகம்	...	...	...	16
உண்மையே	...	...	...	52
உன்னுறை	...	...	...	52
உந்தன்	...	...	...	19

ஊ

				பக்கம்.
ஊக்கம்	...	...	...	38
ஊற்றும்	...	...	...	7

எ

எங்குந்	...	...	...	27
எம்ஊரும்	...	...	...	32
எந்தச்	...	...	...	35
எந்தன்	...	...	...	37
எனக்குத்	...	...	...	38

ஏ

ஏழைக்	...	...	...	15
ஏனைய	...	...	...	34
ஏந்திர	—	...	...	41

ஐ

ஐயம்	—	—	—	37

ஒ

ஒன்றுங்	—	—	—	20
ஒன்றுந்	—	—	—	20
ஒன்றும்	—	—	—	21
ஒன்றுமா	...	...	—	21
ஒளிதரு	...	...	—	27
ஒழியா	...	...	—	28
ஒழிசேர்	...	...	—	29
ஒருபுதுமை	...	...	—	31
ஒரு தினம்	...	...	—	48

க

பக்கம்.

கருவுடை 1
கல்லாய் 9
கண்ணே 19
கண்ணன் 25
கழகார் 29
கடிமலர் 30
காத்திடை 40
களங்கமில் 52
கரும்பே 14
கணக்கில் 32

கா

காலையில் 2
காட்டை 8
காக்காய் 18
கானல் 38

கி

கிழவனும் 49

கூ

கூடி 24

கொ

கொங்கர் 6
கொடிபட 28

சு

	பக்கம்.
சர்க்கரை	14

சி

சிசுமுதல்	7
சினமும்	24
சின்னஞ்	25
சிங்காரத்	25
சிறுவர்	35
சிறுதுளியும்	6

சு

சுவைதான்	14

செ

செவ்வா	16
செருப்படி	32

சோ

சோதிட	4

ஞா

ஞாயிறு	5

த

பக்கம்.

தன்னுயிர்	...	...	...	46
தமிழர்	...	...	...	34

தா

தாழாய்	...	...	...	13
தாயே	...	...	...	19

தி

திருவருள்	...	...	...	22
திரிதரு	...	...	...	28
திங்கள்	...	...	...	29

து

துணையார்	...	...	...	29

தெ

தெருவில்	...	...	...	36

தொ

தொழிலே	...	...	...	35
தொழிலும்	...	...	...	35
தொழில்	...	...	...	35
தொழிலின்	...	...	...	36

தோ

தோழி	...	...	...	35

ந

				பக்கம்.
நடப்பன	...	...	...	8
நகுஞ்சீர்	...	...	...	26
நகைசேர்	...	...	...	26
நடமார்	...	...	...	26
நதிதரு	...	...	...	28
நல்லிசை	...	...	...	45
நகரினிற்	...	...	...	46
நவமலி	...	...	...	27

நா

நாட்டம்	...	...	...	4
நாட்டிற்கா	...	...	...	9
நான்கு	...	...	...	15

நி

நிலத்தை	...	...	...	7
நினைப்போல்	...	...	...	9
நின்னை	...	...	...	16
நிறஞ்சேர்	...	...	...	29

நீ

நீயும்	...	...	...	9, 16
நீண்ட	...	...	...	17

நெ

நெருப்பில்	...	...	...	4
நெல்லே	...	...	...	16

ப

பக்கம்.

பள்ளியதில் 31
பணியை 35
பண்டொரு 41
படையினின் 45
படுவெயில் 47

பா

பாஞ்சல 53

பி

பிறந்திடும் 2
பிறையினை 5
பிள்ளாய் 19
பிறர்துயர் 53

பு

புல்லும் 7
புன்செய் 8
புதிய 30
புன்மையோர் 53

பொ

பொன்னெறும்பு 46
பொம்மை 25

ம

	பக்கம்.
மக்களும்	3
மலைகலை	3
மழையே	7
மலையும்	7
மலையில்	8
மக்கட்கு	9
மலரோ	10
மல்லிகை	11
மக்கள்	14, 15, 34
மனிதன்	15
மலரடி	22
மண்கால்	26
மணியார்	28
மக்களை	31
மலையும்	37
மற்றுமே	40
மனமகிழ	51
மன்னனை	50
மன்னவன்	50

மா

மார்பும்	22

மி

மிளிர்தரு	27

மீ

பக்கம்.

மீண்டும் 39

மு

முல்லைப்பூ 12
முன்னும் 23
முரசார் 29
முதியோர் 31
முயல்க 36
முழுவதும் 40
முதியனை 49
முதியவன் 50

மெ

மெல்லிய 5

மே

மேற்றிசை 5
மேகங்கள் 6
மேற்கடல் 3
மேகங்காள் 6
மேனின்று 32
மேனாள் 36

மை

மைந்தரின் 2

யா

				பக்கம்.
யானிங்	...	...	...	32
யான்பெறும்	...	...	...	49

வ

வந்தார்	...	...	...	8
வண்டல்	...	...	...	9
வருவாய்	...	...	...	19
வள்ளுவர்	...	...	...	34
வனமார்	...	...	...	29
வணிகன்	...	...	...	44

வா

வானம்	...	...	...	24
வாயுதம்	...	...	...	31
வானின்	...	...	...	39

வி

விதிப்பு	...	...	...	29
விண்ணெனும்	...	...	...	26
விதமுள	...	...	...	1

வெ

வெற்றுரை	...	...	...	6

வே

வேதியன்	...	...	...	40
வேலையில்	...	...	...	3